இலங்கையில் செய்திப் பத்திரியாக பதிவு செய்யப்பட்டது. Registered sa a Newspaper at the GP

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM


පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 46 | 01 மாசி 1999 | விலை: ரூபா 7.00










# வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல்.....?

தேர்தல்களை ஒத்திவைக்க அவசரகாலச் சட்ட விதிகளைப் பயன்படுத்த முடியாது எனவும், தேர்தல் நடைமுறையில் ஜனாதிபதியின் தலையீடு சட்டத்திற்கு முரணானது எனவும், அண்மையில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதையடுத்து எழுந்துள்ள சூழ்நிலையில் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல்களும் நடத்தப்படலாமென அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டுவருகிறது. கடந்த ஒன்பது வருடங்களாக வடக்கு கிழக்கு மாகாணசபை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இன்றி மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவருவது தெரிந்ததே. வடக்கு கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள், பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல் எனப்பல தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ள போதும் வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல்கள் மட்டும் முன்னைய ஐ.தே.க அரசாங்கத்தினாலும், தற்போதைய அரசாங்கத்தினாலும் இது வரையில் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### மாகாண சபைகளின் அறிமுகம்

தமிழ் பேசும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்திய அரசாங்கத்தின் நேரடித் தலையீட்டால் கையெழுத்தான இந்திய-இலங்கை அரசாங்கங்களுக்கிடையிலான ஜே.ஆர்.-ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தின் கீழ்மாகாணசபைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

1978ம் அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13வது திருத்தச்சட்டத்தின் மூலமாக மாகாணசபைகள் நாடெங்கும் அமுலுக்கு வந்தது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாகாண நிர்வாகப் பொறுப்பையேற்று மக்களுக்கு அரசியல் தலமைத்துவத்தை வழங்க விடுதலைப்புலிகள் முட்டுக் கட்டை போட்டு வந்த நிலையில் 1988ல் மாகாண நிர்வாகத்தைப் பொறுப்பேற்றதன் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாக அலகின் கீழ் கொண்டுவரப்படவும், மாகாண அரசுக்கான அடிப்படைக்கட்டமைப்புக்களை ஏற்படுத்தவும், இயலுமானதாக இருந்தது.

**தேர்தல்களை ஒத்திவைக்க அவசரகால சட்டவிதிகளைப் பயன்படுத்த முடியாது. - உயர்நீதிமன்றம் தீர்ப்பு.**

எனினும் இந்தச்சபை தொடர்ந்து செயற்படுவதனால் தங்களின் தலமைத்துவத்திற்கு பாதிப்பு ஏற்படுமெனக்கருதிய புலிகள் 1990ல் பிரேமதாசா அரசாங்கத்துடன் இணைந்து செய்த கபடத்தனமான சதியினால் வடக்கு கிழக்கு மாகாண சபையின் அரசியல் தலமைத்துவம் இல்லாது போயிற்று.

1990 மார்ச்சில் வடக்கு கிழக்கு மாகாண சபையை பிரேமதாசா அரசாங்கம் உத்தியோகபூர்வமாகக்கலைத்ததன் பின்னர் இன்றுவரை இம்மாகாணத்திற்கான தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

எனினும் நாட்டின் ஏனைய ஏழு மாகாணங்களிலும் மாகாணசபைகள் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன என்பதுடன் அவற்றிற்கான தேர்தல்களும் கூட காலந்தோறும் ஒழுங்காக நடத்தப்பட்டுவருகின்றன.

### வடக்கு கிழக்கு மாகாண சபையின் இன்றைய நிலை

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் பங்களிப்பு இன்மையால் வடக்கு கிழக்கு மாகாணசபையில் பல்வேறு விதமான மோசடிகளும், ஊழல்களும் மலிந்து போயிருப்பதாக பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். வெறுமனே கோவைகளைச் சுமக்கும் கழுதையாக மாகாணசபை நிர்வாகம் இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநரின் கீழ் நிர்வாகத்தைச் சீர்ப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. எனினும் இம்மாகாண மக்கள் தமக்கு தேவையான அபிவிருத்தி பணிகள் பற்றித் திட்டமிடவும், சேமநலன்கள் பேணும் வகையில் செயற்படவும், எதிர்கால நலன்கள் குறித்து ஆக்கபூர்வமாகத் தொழிற்படவும் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும்.

தொடர்ச்சி 03ம் பக்கம்☞

**வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களையும் நடாத்த வேண்டுமென முஸ்லீம் காங்கிரஸ் தேர்தல்கள் ஆணையாளரைக் கேட்டுள்ளது. - மு.கா. பொதுச் செயலாளர் அறிவிப்பு.**

---

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

## ஐக்கியமே அவசியம்

தோழர் வரதராஜப்பெருமாளின் இலங்கை வருகை பற்றிய பத்திரிகை செய்திகளை அடுத்து பத்திரிகைகளிலும், தொடர்பு சாதனங்களிலும் வெளியான உட்கட்சி விவகாரங்கள் தொடர்பான செய்திகள் வதந்திகள் தொடர்பாக எமது கட்சியின் மத்தியகமிட்டி 31.01.99 அன்று கூடி ஆராய்ந்தது.

உட்கட்சி விவகாரங்கள் தொடர்பாக பத்திரிகைகள் வெளியிட்ட ஊகிக்கப்பட்ட செய்திகளும் வதந்திகளும் தவறானவை எனவும், இது எமது கட்சியின் மேலும், கட்சியில் இருக்கக்கூடிய தனிப்பட்ட தோழர்கள் மீதும் அநாவசியமான களங்கத்தை ஏற்படுத்தியுள்ளதெனவும் மத்திய கமிட்டி கருதுகின்றது. தமிழ் மக்களின் விடியலுக்காக, அவர்களுடைய கௌரவமான தீர்விற்காக கட்சி தொடர்ந்தும் பணிபுரியும் என்பதை நாம் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் இயக்கங்களுக்குள்ளும் இயக்கங்களுக்கு மத்தியிலும், ஒற்றுமை முக்கியம் என்பதை எமது கட்சி உறுதியாக வெளிப்படுத்துகின்றது. தமிழ் மக்களுக்கான ஜனநாயகம், யுத்த நிறுத்தம், அபிவிருத்தி, அரசியல் தீர்வு ஆகியவையே இன்று தமிழ் மக்கள் எதிர் நோக்கும் முக்கிய விடயங்களாகும்.

இவற்றை நிறைவேற்றுவதற்கான உள்நாட்டு வெளிநாட்டு அழுத்தங்களை உருவாக்க வேண்டியதும் தமிழ் கட்சிகளின், தமிழ் மக்களின் கடமையாகும். இந்த வகையில் கட்சிகளுக்குள்ளும், கட்சிகள் மத்தியிலும் சகிப்புத்தன்மையும், ஐக்கியமும் அவசியம் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

மேற்கண்ட விடயங்களை நிறைவு செய்ய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தன்னாலான சகல விதமான முன் முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதையும் எமது கட்சி சகல மக்களுக்கும் தெளிவுபடுத்துகின்றது.

மத்திய கமிட்டி சார்பாக க. பிரேமச்சந்திரன்
செயலாளர் நாயகம், ஈ.பி.ஆர்.எல்.எவ்

# சிறு பொறி

யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் அவர்கள் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் விடுதலைப்புலிகளுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். பேச்சுவார்த்தைக்கான சமரசப் போக்கை உருவாக்கவும், உகந்த தீர்வினைக் காணவும், பொதுமக்களின் நலன் கருதி பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் முயலவேண்டும் என்பதே அவரது வேண்டுகோளாகும்.

தமிழர்களான சிறுபான்மை இனத்தவர் போரினால் அழிகின்றனர் என்றும் அவர் கவலைப்பட்டிருப்பதன் வாயிலாக இலங்கைத்தீவின் ஒருமைப் பாட்டிற்குள் தீர்வைக்காண விடுதலைப்புலிகள் முன்வரவேண்டும் என்பதுவே மறைமுகமாக வலியுறுத்தப்பட்டுள்ளது எனக்கருதலாம்.

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் பதினைந்து வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து கொண்டிருக்கும் போரினால் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. கல்வியிலும், அபிவிருத்தியிலும் தமிழ் மக்கள் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மட்டும் தான் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பவர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்கள் கூட தமிழீழத் தாயகம் என்பது எட்டப்பட முடியாத இலக்கு என்பதை உணர்ந்து வருபவர்களாகவே காணப்படுகின்றனர்.

தேசிய சமாதானப் பேரவை ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய நாடக அரங்கக் கல்லூரிப் பிரமுகர்கள் கூட தமிழ்மக்கள் தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தவில்லை எனக் குறிப்பிட்டிருப்பதை இதற்கு உதாரணமாகச் சுட்டலாம்.

நீதிக்கும் சமாதானத்திற்குமான மக்கள் ஆணைக்குழுவினர் கொழும்பிலுள்ள வர்த்தகப் பிரமுகர்கள் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்று லலித் கொத்தலாவலவுக்கு எழுதியுள்ள வாழ்த்துச் செய்தியிலும் கூட தனிநாட்டுக்கான போர் தொடரப்படுவதை ஆதரிப்பதாகக் குறிப்பிட்டிருக்கவில்லை. ஆக புலிகளின் தாகமாக சொல்லப்படும் தமிழீழத் தாயகம் என்பது இப்போதும் தமிழ் மக்களின் தாகமாக இல்லை எனலாம்.

தமிழ் மக்கள் மத்தியில் தொடருகின்ற போர் குறித்து மாறுபாடான அபிப்பிராயங்கள் முளைவிடத் தொடங்கியுள்ளன என்பதற்கு இவை சில எடுத்துக்காட்டுக்கள் மட்டுமே. முடிவின்றி தொடரும் யுத்தத்தால் தமிழ் மக்களுக்கு அவலமான அகதி வாழ்க்கை வாய்த்து, துன்பமே தொடர் கதையாகிக் கொண்டிருக்கின்றது. அவலத்தையும், அழிவுகளையும் மட்டுமே சந்தித்தபடி அரசியல் உரிமைக்கான குரல் அர்த்தபுஷ்டியாக ஓங்கி ஒலிக்க முடியாது என்பது நிதர்சனமாகிவருகிறது.

மக்களை நேசித்து - மக்களின் எதிர்கால நலன் என்பதைப் பொறுப்புணர்வுடன் சிந்திக்கும் எவரும், தொடரும் அழிவுகள் கண்டு வாளாமல் இருக்க முடியாது. எனவேதான் இலங்கைத்தீவின் ஒருமைப்பாட்டை கேள்விக்குறியாக்கும் போர் நியாயமானது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலமைக்கு தள்ளப்பட்டுவருகின்றனர்.

"பேரினவாத அரசாங்கங்கள் எதுவும் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முன்வைக்காது. பேரினவாத அரசுகள் எதையும் நம்பமுடியாது" என்ற கூற்றுக்களில் ஒழிந்து போயுள்ளது உண்மைக்குள் குளிர்காய்ந்து கொள்ளும் கனவான்கள் மட்டுமே, புலிகளின் ஆயுதப்போர் தனிநாடு என்னும் இலக்கை எட்டும் என்ற கற்பனைகளை வளர்ப்பவர்களாகியுள்ளனர்.

மக்களின் நாளாந்த வாழ்க்கை அவலங்களுக்கு சிறீலங்காவின் பேரினவாதப் போக்கே காரணம் எனச்சுட்டும் இத்தகையவர்கள் புலிகளின் செயற்பாடுகளால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக்கூட அரசின் இயலாமையாகவே சுட்டிக்காட்டி வீரத்திற்கு மகுடம் சூட்டி மகிழ்கின்றனர். எனினும் இத்தகையவர்கள் போரிற்கு ஆதரவாக தம்மளவில் எந்தவித அர்ப்பணிப்புகளையும் செய்துவிடுவதில்லை என்பது கண்கூடு.

எனவேதான் சிறீலங்கா அரசுக்கு எதிரான ஆயுதமேந்திய எதிர்ப்பியக்கம் என்ற போர்வைக்குள் ஒழிந்து கொண்டிருக்கும் அராஜகங்களுக்கு எதிராக.மக்களின் குரல்கள் மெதுவாக ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான பேச்சுக்களில் எல்லாத் தரப்பினரும் பங்காற்ற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கிவருகிறது. சமாதானம் வேண்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சர்வமததலைவர்களின் பிரார்த்தனையிலும் இது வெளிப்பட்டுள்ளது. இதற்கு சர்வதேச சூழலும் சாதகமானதாகிவருகிறது.

தென்னாபிரிக்கா முதல் இந்தியா வரையில் பிரிட்டன் முதல் அவுஸ்திரேலியா வரையில் அனைத்து நாடுகளும் தமிழீழம் என்னும் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கப் போவதில்லை என்பதை வெளிப்படையாகவே புலப்படுத்தி வருகின்றன.

ஆக தனிநாடு என்னும் இலட்சியத்தைக்கைவிட்ட துரோகிகள் என்று முத்திரை குத்தி மாற்று அரசியல் தலமைகளை அழித்தொழிக்கும் போக்குகளுக்கு முற்றுப்புள்ளிவைக்க மக்கள் முன்வரவேண்டிய தருணம் வந்துவிட்டது.

எமது மக்களின் தலைவிதியை எழுதும் மீட்பர்கள் அல்லது இரட்சகர்கள் எவரும் வந்து குதித்துவிடப் போவதில்லை என்பதை உணரவேண்டிய காலம் இது. எமது துன்பங்கள், துயரங்கள், அவலங்கள் என்பவற்றை மட்டுமே எடுத்துச் சொல்லி அனுதாபம் தேடுவதை விடவும் எமது மண்ணில், எமது பலத்தில், எமது வளங்களில் தங்கி நிமிர்ந்து கொள்ளவும் வேண்டிய வேளை இது.

அனைத்து தமிழர் தரப்பினரும் ஒன்றுபட்டு நிற்பதையும், ஒருமித்துக் குரல் கொடுப்பதையுமே மக்கள் விரும்புகின்றனர். தமிழ் மக்களின் அடிமன ஆவலாக வேரோடி நிற்கும் இவ் எண்ணத்தை செயலாக்க வேண்டியதே அவசியமானது அவசரமானது.

குறுகிய கட்சி நலன்கள், கடந்து ஐக்கியமாகக் கைகோர்த்துக் கொள்ளும் பெருந்தன்மை வெளிப்படுத்தப்படுமா என்பதுவே காலத்தின் கேள்வியாகும்.



# செவிகளில் விழுந்த குரல்கள்



### துயரங்கள் தொடரும்

தமிழ்த் தலைவர்களைக் கொல்வதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு புலிகள் இயக்கம் தீர்க்கப் போகிறது? இவர்கள் தமது பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிடா விட்டால் தமிழ் மக்களின் துயரங்கள் நீண்ட காலத்துக்குத் தொடரும் என நாம் ஜோஷ்யம் கூற விரும்புகின்றோம்.

டெய்லி நியூஸ் இதழில்
ஆசிரியத் தலையங்கம்.

### உலகின் கரிசனை

உலக நாடுகளை இலங்கையின் இனப்பிரச்சினை வெகுவாகப் பாதித்து உள்ளது. அதனைத் தீர்த்து வைக்க வேண்டுமென்ற கரிசனை அந்த நாடுகளுக்கு குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்
சைமன் ஹியுஜெஸ் கொழும்பில் கூற்று.

### தேரோவின் கண்டனம்

அண்மையில் அம்பாறையில் முஸ்லீம்களுக்கு எதிராக சிங்களவர்கள் என்ற ரீதியில் ஆர்ப்பாட்டம் செய்தவர்களைக் கண்டிக்கிறேன். இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமானால் முதலில் இந்த நாட்டில் இனவாதிகளை ஒடுக்குவதுடன் இனவாதக் கருத்துக்களை தெரிவிப்போருக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். இனவாதக் கருத்துக்களையும், இனவாத நோக்கங்களையும் கொண்டு செயற்படுவோரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கைது செய்து தண்டிக்க வேண்டும்.

ஹெட்டி முல்ல ராகுல தேரர் அம்பாறை.

### போரினால் தமிழ் மக்களுக்கு அழிவே

தமிழர்களான சிறுபான்மை இனத்தவர் இன்று போரினால் அழிகின்றனர். பேச்சுவார்த்தைக்கான சமரசப் போக்கினை உருவாக்கவும், உகந்த தீர்வினைக்காணவும் புலிகள் முன்வர வேண்டும். அத்துடன் அதி தீவிரம் குறைத்து பொது மக்களின் நலன் கருதி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் அவர்கள் முன்வரவேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கிடின் அனைவருக்கும் தாழ்வு. எனவே தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை மறந்து ஏகோபித்த குரலில் அனைவரும் செயற்பட்டால் பிரச்சினைகளை இலகுவவில் தீர்க்க முடியும்.

புத்தாண்டுச் செய்தியில்
யாழ் ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை.

### ஜனநாயகத்தை தவிர மாற்றில்லை

தமது உரிமைகளுக்காக போராடும் அனைவரும் ஜனநாயக வழிகள் மூலமே தமது பிரச்சினைக்கு தீர்வு தேடுகின்றனர். ஜனநாயகத்தைத் தவிர உலகிற்கு வேறு எதிர்காலமோ மாற்று வழியோ கிடையாது. ஜனநாயக வழி மூலம் புதிய பாதையொன்றை ஏற்படுத்தலாம். இதனை கியூபாவில் தலைவர் பிடல் காஸ்ரோ உறுதிப்படுத்தியுள்ளார். எதிர்காலத்தில், கியூபா போன்ற பல கம்யூனிஸ்ட் நாடுகள் தலைதூக்குவது உறுதி.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா
நவசமசமாஜக்கட்சியின் 21வது ஆண்டு விழாவில்.

### முயற்சி வெற்றி பெறட்டும்

நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த அர்த்தமற்ற யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர அரசுடனும், எதிர்க்கட்சியுடனும் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள வர்த்தக சமுதாயம் எடுத்து வரும் நடவடிக்கைகளை பாராட்டுகின்றோம். இந்த முயற்சிகள் வெற்றி பெற வேண்டுமென அனைவரும் விரும்புகின்றனர். நீங்கள் எடுக்கும் தேசிய மட்டத்திலான இந்தச் சமாதான முயற்சிகள் வெற்றியடைந்து நாட்டில் அமைதி ஏற்பட இறைவன் ஆசிகிடைக்க வேண்டும்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான யாழ் மக்கள் குழு வர்த்தக
சம்மேளனத் தலைவர் லலித் கொத்தலாவலவுக்கு எழுதிய கடிதத்தில்.

### யுத்தம் நிற்க வேண்டும்

வலது குறைவோர் வீதத்தை குறைக்க முயற்சி எடுத்தாலும், இன்றைய யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படாத பட்சத்தில் அது நடக்கக்கூடியதல்ல. இதனால் யுத்தம் நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும் என்று அனைவரும் முதலில் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும். துப்பாக்கி வேட்டுகளுக்கும் கண் ணிவெடிகளுக்கும் மத்தியில் சிக்கி வலது குறைபவர்களின் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. முதலில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்க வேண்டும்.

ஊனமுற்றோர் தின விழாவில்
ஏறாவூர் பிரதேச செயலாளர் சிறீசங்கர்.

### முறைப்பாடு செய்ய அச்சம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் காணாமற் போன சுமார்1500பேர் குறித்து அச்சம் காரணமாக இதுவரை முறைப்பாடுகள் செய்யப்படாமல் உள்ளது. காணாமற் போனவர்களின் மறைவுக்கு காரணமானவர்கள் உயர் பதவிகளில் இருந்ததன் காரணமாக முறையிடப் போனவர்கள் அச்சம் கொண்டிருந்திருக்கின்றனர். இதனால் இச்சம்பவங்கள் குறித்து பதிவுகள் செய்யப்படவில்லை. ஆயினும் மேற்படி சம்ப வங்களுக்கு காரணமானவர்கள் இப்போது இடமாற்றம் பெற்று விட்டமையாலும் சூழ்நிலை மாற்றங்களாலும் முறைப்பாடு செய்யப் பலர் தயாராகவுள்ளனர்.

ஜேசுயிட் திருச்சபையை சேர்ந்த
அருட்தந்தை மில்லர் அடிகளார் தெரிவிப்பு.

### அஸ்கிரிய பீடாதிபதியின் வேண்டுகோள்

யுத்தம் முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு முடிவு காண்பதற்காக யாரேனும் மத்தியஸ்தம் வகிப்பதோடு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முயற்சி எடுக்க வேண்டும். தொடர்ந்து கொண்டே செல்லும் யுத்தமே நாட்டுக்கு பெரும் தலையிடியாக உள்ளது. யுத்தம் விரைவாக முடிவடையும் எனத் தெரியவில்லை. யாரேனும் இதற்கு மத்தியஸ்தம் வகிக்க வேண்டும். அதனூடாக பேச்சுவார்த்தை மூலம் யுத்தத்திற்கு முடிவுகாண முயற்சி எடுக்க வேண்டும். நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலமே நாட்டுக்கு நன்மை விளைய முடியும்.

நீதியமைச்சர் ஜீ.எல்.பீரிசிடம்
அஸ்கிரிய பீடாதிபதி பலிபானந்த சந்தானந்த தேரர் தெரிவிப்பு.

### புலிகளின் தார்மீகக் கடமை

அன்று தொட்டு இன்று வரை புலிகளை எதிர்க்காமல், அவர்களைக் கண்டிக்காமல், அவர்களின் முக்கியத்துவம் கருதி அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் எனக் கோரி வரும் எமக்கு இடையூறு இல்லாமல் முடிந்தால் - அவசியம் ஏற்பட்டால் - தேவை ஏற்பட்டால் எமக்குப் பாதுகாப்பு தரவேண்டிய தார்மீகக் கடமை புலிகளுக்குண்டு.

தமிழர் விடுதலைக்கூட்டணி உபதலைவர்
வீ. ஆனந்த சங்கரி கருத்து.

### ஜனநாயகம் தேர்தலுக்காகவல்ல

ஜனநாயகம் என்பது தேர்தலுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவோ, அரசியல் மேடைகளுக்கு கட்டுப்படுத்தப்பட்டதாகவோ இருக்கக் கூடாது. சுதந்திர நாடொன்றில் ஜனநாயகம் சகல துறைகளிலும், சதாகாலமும், உரிய முறையில் காப்பாற்றப்படவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர்
ரணில்விக்கிரமசிங்க உரை.


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

**புதிய கண்ணோட்டம்
த.பெ.இல: 442
கொழும்பு**

E.P.I.C., Box No: 95,
95144, GargesLes,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

Post Bag: 1041,
Madras-17,
India.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

310, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021-2022

P.Fach: 66,
59514 Welver,
Germany.

பள்ளிமுனை வீதி,
உப்புக்குளம்.
மன்னார்.
☎ 023-2370

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-22398


22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22724

மின் அஞ்சல் முகவரிகள் (E-mail Address):

epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epic-vu@sltnet.lk - Vavuniya
epiclondon@gn.apc.org - London
editor@epicnews.com - Canada
epic-g@t-online.de - Germany

Web site Address : http://www.epicnews.com

# இனிய தமிழ் மக்களே!....



## அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

தமிழ் மக்கள் மேல் சிங்கள அரசாங்கங்கள் ஏற்படுத்தி வந்த பல்வேறுபட்ட அடக்கு முறைகள், தமிழ் மக்களுக்கான ஓர் தனிநாட்டுப் போராட்டத்தை நோக்கித் தமிழ் மக்களைத்தள்ளியது.

தந்தை செல்வாவின் தலைமையிலான தமிழரசுக்கட்சி, பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன மாறி மாறி வந்த அரசுகளுடன் பல பேச்சுவார்த்தைகளையும், ஒப்பந்தங்களையும் மேற்கொண்ட போதும் கூட, அவை யாவும் சிங்கள அரசாங்கங்களால் மதிக்கப்படாமல் குப்பைக் கூடைக்குள்ளேயே வீசப்பட்டன.

இவையெல்லாம் முடியாமல் போனபோதுதான், 1977ல் வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக்கான போராட்டத்தை பிரகடனப்படுத்தியது.

**யுத்தம் நிறுத்தப்பட்டு கௌரவமான தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என்பதுடன் இன்றுள்ள நிலையில் நியாயமானதொரு ஜனநாயக சூழல் ஏற்படுத்தப்பட்டாலே மக்களின் கருத்துக்கள் முழுமையாய் அறியப்படலாம் என்பதுடன், எமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான சூழ் நிலையையும் ஏற்படுத்தலாம்.**

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது பிரகடனத்தில் உறுதியற்றிருந்ததாலும், அதற்கான சரியான தலைமைத்துவத்தை கொடுக்கத் தவறியதாலும், இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல பலஇயக்கங்கள் தோன்றின.

அரசின் இன அழிப்பு நடவடிக்கைகள், இந்திய விரோதப் போக்குகள் அமெரிக்க சார்புத்தன்மை, ஈழத்தமிழர்களுக்காக தமிழகத்தில் ஏற்பட்ட மக்கள் எழுச்சி போன்றவை இந்தியாவை ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் தலையிடவைத்தது.

ஈழத் தமிழரின் நியாயமான உரிமைகளுக்காகவும், சிங்கள அரசின் இனப்படுகொலைகளுக்கெதிராகவும், இந்திய அரசு உலகமெல்லாம் குரல் கொடுத்தது. இதன்பொருள் இந்தியா இலங்கையில் தமிழருக்கானதனிநாட்டை ஏற்றுக்கொண்டதாக அர்த்தப்பட்டிருக்கவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் கௌரவமாகத் தீர்க்கப்பட்டு தமிழ் மக்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய வகையில் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஓர் சுயாட்சி முறை உருவாக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாகவிருந்தது. இதற்காக இலங்கை அரசுடன் பல சுற்றுப் பேச்சுக்களை அது நடாத்தியது.

சிறீலங்கா அரசு இவற்றை ஏற்றுக்கொள்ளாத.போது அதற்கு நெருக்கடி கொடுப்பதற்காக தமிழ் இயங்கங்களுக்கும் ஆயுத உதவி உட்பட பல உதவிகளைச் செய்து வந்தது.

ஆனால் இவை எல்லாம் சரிவராமல் போகவே இந்திய அரசு இலங்கைப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டது.

இதன் பிரகாரம் ஜே.ஆர். ஜயவர்த்தனா இந்தியாவால் நிர்ப்பந்திக்கப்பட்டு இந்திய இலங்கை உடன்படிக்கை ஒன்று உருவாக்கப்பட்டது. இவ் உடன்படிக்கையை நிறைவேற்ற இந்திய இ ராணுவமும் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இவ் ஒப்பந்தத்தை நிறைவேற்ற இந்தியா உறுதி அளித்ததுடன், தமிழ் கட்சிகள் சுட்டிக்காட்டிய காணி, சட்டம், ஒழுங்கு போன்ற பல முக்கியமான விடயங்களில் தொடர்ந்து பேசி ஓர் முடிவுக்கு வரமுடியும் எனவும் இந்திய அரசு கூறியது.

தனிநாட்டுக்கான போராட்டத்தில் இருந்த தமிழ்க்கட்சிகளுக்கு இத்தகைய தீர்வு முழுமையான திருப்தியைத்தராத பொழுதும் ஓர் இடைக்காலத்தீர்வாக தமிழ் இயக்கங்கள் அதனை ஏற்றுக் கொண்டன.

ஆரம்பத்தில் இதனை ஏற்றுக் கொண்ட விடுதலைப்புலிகள், பின்னர் தமது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கி இந்திய அமைதிகாக்கும் படையுடன் ஓர் யுத்தத்தை ஆரம்பித்தார்கள். புலிகளின் தூரநோக்கற்ற இச் செயற்பாடானது தமிழ் மக்களே விரோதித்துக் கொள்ளும் சூழலை ஏற்படுத்தியது. இருந்த பொழுதும் கூட இந்திய அரசு ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் ஏனைய தமிழ்க்கட்சிகளின் உதவியுடன் வட-கிழக்கு மாகாண சபையை அமைத்தது.

அதே சமயம் பிரேமதாசா அரசுடன் இணைந்து கொண்டு விடுதலைப்புலிகள் இம் மாகாண சபையை சீர்குலைத்ததுடன் இந்திய இராணுவம் இங்கிருந்து வெளியேற வேண்டும் எனவும் கூறினார்கள்.

இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியும் கொல்லப்பட்டார். அது மாத்திரமல்லாமல் புலிகள் மீண்டும் பிரேமதாசா அரசுக்கெதிராகவும் யுத்தத்தை தொடங்கினார்கள். இதனால் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்த ஒரேயொரு நட்பு நாடான இந்தியாவை நாம் விரோதித்துக் கொண்டது மாத்திரமல்ல, இந்தியா இலங்கை அரசுடன் நட்புறவைப் பாராட்டும் ஓர்நாடாகவும் மாற்றமடைந்தது. எமது விடுதலைப் போராட்டத்தில் நடைபெற்ற மிகப்பெரிய இராஜ தந்திரத்தவறு இது வென்றால் மிகையாகாது.

இதன் பின்னர் எமது போராட்டத்துக்கு சர்வதேச ரீதியாக இருந்த ஆதரவை நாம் இழந்ததுடன், எமது போராட்டம் பயங்கர வாதப் போராட்டம் எனவும் முத்திரை குத்தப்பட்டது. இங்கு நடக்கும் அழிவுகள் யாவும் சர்வதேசப் பத்திரிகைகளுக்கு செய்திகளாகத் தெரிந்தனவே தவிர, எமது போராட்டத்தையாரும் கண்டு கொள்ளவில்லை என்பதே உண்மை. இதனையே புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களும் 1998நவம்பர் மாதம் தனது மாவீரர் தின உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இவை மாத்திரமல்லாமல், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பல பிரதேசங்களும் இராணுவக் கட்டுப் பாட்டிற்குள் சென்றது. புலிகளும் கூட தாம் மூன்றாம் தரப்பொன்றின் உதவியுடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயார் எனக் கூறும் சூழல் ஏற்பட்டது.

இந்நிலையில் தனிநாடு, தமிழீழம் என்ற கோசத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் தேவைதானா என்பதைச் சிந்திக்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

*அன்பிற்கினிய தமிழ் மக்களே!*

எமது அழிவுகள் மரணங்கள், கஸ்டங்கள், துன்பங்கள், துயரங்கள், பசி, பஞ்சம், பட்டினி, இவை எல்லாவற்றையும் மீண்டும், மீண்டும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டுமென்பதல்ல. இந்த அவலங்களுக்குள் வாழ்க்கை நடாத்தும் எங்களுக்கு இவை எல்லாம் தெரிந்தவையே.

உலகம் 2000ம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கவுள்ளது. தொலைத் தொடர்பு வசதிகள் இல்லாமலும் இன்னும் இருண்ட யுகத்தில் வாழவே நிர்பந்திக்கப் படுகின்றோம். நவீன தொழில் நுட்பமும் நவீன கல்வியும், நவீன கணனி முறைகளும் உலகை ஆக்கிரமித்து, உலகமே மாற்றமடையும் பொழுது நாம் இன்னும் யுத்தத்தின் கோரப்பிடிக்குள் அகப்பட்டு எமது சமூகத்தின் எதிர்காலத்தையே சீரழிக்கின்றோம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக யாருக்காக நாம் தனி நாடு கேட்டோமோ அவர்கள் எல்லோரும் தொடர்ந்து அகதிகளாக மேல் நாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கும் சூழ்நிலையே இன்று இருந்து வருகின்றது.

இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், இஸ்லாமியத் தமிழர் என 35 இலட்சம் மக்களுக்காக தனி நாடு கோரி போராடப்புறப்பட்ட நாம், மலையகத் தமிழரையோ, இஸ்லாமியத் தமிழரையோ எமது போராட்டத்தில் இணைக்கத்தவறி விட்டோம்.

இன்று ஏறத்தாழ 16 இலட்சம் இலங்கைத் தமிழரில் எட்டரை லட்சம் மக்கள் அகதிகளாக வெளியேறியும்,இன்னும் 70,000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் மரணித்தும் போன சூழ் நிலையில் தான் எமது போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கின்றோம்.

இன்னும் ஐந்து பத்து வருடங்கள் இவ்யுத்தம் தொடருமானால் வட-கிழக்கில் எமது சனத்தொகை எவ்வளவு இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அதன் பின்னர் ஈழக் கோரிக்கை மாத்திரமல்ல எந்தக் கோரிக்கைகளை முன்வைக்கவும் நாம் தகுதியற்றவர்களாகிவிடுவோம்.

வட-கிழக்கில் இயல்பு நிலையும், ஜனநாயக சூழலும் இருந்தால் மாத்திரமே, எமது மக்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்கோடுவதை விடுத்து தமது சொந்த மண்ணில் வாழ்வதற்கான விருப்பு ஏற்படும்.

சமுதாயத்தில் கௌரவத்துடனும் செல்வாக்குடனும் வாழ்ந்த பலர் இந்த யுத்தத்தால் பிச்சைக்காரரிலும் விட மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதுமாத்திரமல்ல மனிதனாகப் பிறந்த எவனும் சீரோடும் சிறப்போடும் வாழ ஆசைப்படுவானே தவிர,மரணித்துப் போக விரும்பமாட்டான்.

ஆனால் போராட்டம் என்ற பெயரில் மரணம் நாளாந்தம் கதவைத்தட்டுமாயின், மக்கள் அதிலிருந்து தப்பிக்க முயற்சிப்பார்களே அன்றி தாங்களும் இறந்து போக வேண்டுமென விரும்ப மாட்டார்கள். எனவே வடகிழக்கில் இயல்பு வாழ்க்கையை தோற்றுவிக்க வேண்டும் என்பதில் கூடிய அக்கறை செலுத்தப்படவேண்டும்.

போராட்டம் என்ற பெயரிலும், அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கின்றோம் என்ற பெயரிலும், போக்குவரத்தை தடை செய்வதும் மின்சாரத்தை தடை செய்வதும், உள்ளூராட்சி சபைகளை இயங்காமல் செய்வதும் சரியான அணுகுமுறையாக இருக்க முடியாது. இவையாவும் ஒட்டுமொத்தமான சமூகத்தையுமே சீரழிவுக்குள்ளாக்கிவிடும்.

*எனவே அன்பார்ந்த தமிழ் மக்களே!*

யுத்தம் நிறுத்தப்பட்டு கௌரவமான தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என்பதுடன் இன்றுள்ள நிலையில் நியாயமானதொரு ஜனநாயக சூழல் ஏற்படுத்தப்பட்டாலே மக்களின் கருத்துக்கள் முழுமையாய் அறியப்படலாம் என்பதுடன், எமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான சூழ் நிலையையும் ஏற்படுத்தலாம்.

**உங்கள்**
**சுரேஷ்**

# வட-கிழக்கு மாகாண............

முதலாம் பக்கம் தொடர்ச்சி

தொடர்ந்தும் யுத்தச் சூழ்நிலைக்குள் சிக்குண்டுள்ள மக்கள் அதிலிருந்து விடுபட்டுக் கொள்ளவும் தொடரும் அவலங்களுக்கும்,அழிவுகளுக்கும் விடிவு தேடவும் வேண்டியவர்களாகவுள்ளனர்.

வடகிழக்கு மாகாணசபைக்கான இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படுவது பற்றி அவ்வப் போது பேசப்பட்டிருந்த போதும் நடைமுறையில் எதுவும் செய்யப் படவில்லை.

**யுத்த மேகங்கள் கவிந்திருக்கும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நியாயமான சுதந்திரமான தேர்தலை நடாத்த முடியாது என்பதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆணித்தரமான கருத்து.**
**- மாவை சேனாதிராஜா தெரிவிப்பு.**

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்தும் ஒரே நிர்வாக அலகின் கீழ் பேணப்படும் என்பது குறித்து எந்த உறுதியான உத்தரவாதத்தையும் சந்திரிகா அரசு வழங்குவதாக இல்லை. மாறாக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை நிறுவியதன் மூலமும், பிராந்தியங்கள் தோறும் ஆளுநர் அலுவலகங்கள் திறக்கப்படலாம் என்பதன் வாயிலாகவும் வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்தைப் பிரிப்பதற்கான சதிமுயற்சிகளே திரைமறைவில் இடம்பெற்று வருகிறதோ என்ற சந்தேகமும் தமிழ் மக்கள் மனதில் முளைவிட்டுள்ளது.

### வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் தேவை

தமிழ் மக்களின் எதிர்கால நலன்களுக்காகவே போராடுகின்றோம் எனச்சொல்லிக் கொள்ளும் புலிகள் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையைக் கூடச் சீரழிக்கும் நிலமைக்கு சென்றுள்ளனர்.

போக்குவரத்து,மின்விநியோகம், என்பன போன்ற அடிப்படைவசதிகள் கூட தமிழ் மக்களுக்கு மறுக்கப்படும் அதே வேளையில், புலிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகச் சொல்லப்படும் வன்னிப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஆயுத மோதல்களின் மூலம் தீர்வுகாண முடியாது என்பது பலராலும் உணரப்பட்டுவருகிறது.

எனவே தான் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தலைமைத்துவம் எதுவென்பதைத் தெளிவாகவும், துலாம்பரமாகவும் எடுத்துக்காட்டக் கூடிய வகையில் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல்கள் நடத்தப்படுவதே பொருத்தமானது.

விடுதலைப்புலிகள் மட்டும் தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக்கருதுபவர்களும், அவர்களின் குழப்பம் விளைவிக்கும் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஒத்துப்பாடுபவர்களும் தான் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல்கள் தேவையற்றவை எனக்கூறக்கூடும்.

ஆனால் மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிப்பவர்களும், மக்களின் அரசியல் தலைமைத்துவம் ஜனநாயக வழிமுறைகள் மூலமே நிறுவப் படவேண்டும் என்ற நம்பிக்கை உடையவர்களும் வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படுவதை வரவேற்கவே செய்வர் எனலாம்.

# 1988ல் வடக்கு கிழக்கு மாகாணசபை, 1998ல் குடாநாட்டு உள்ளூராட்சி சபைகள்,

## - ஒரு வித்தியாசமான ஒப்பீடு

எஸ்.கந்தையா

குடாநாட்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டு ஒரு வருடம் உருண்டோடி விட்டது. எனினும் இன்னமும் யாழ். மாநகரசபை உட்பட பல்வேறு பிரதேச சபைகளிலும் செயற்பாடுகள் சீரடையவில்லை. பிரதேசசபை உறுப்பினர்கள் பலர் இன்னமும் பதவியேற்கவில்லை. பதவியேற்ற உறுப்பினர்கள் பலர் பதவி துறந்துள்ளனர்.

மாநகர முதல்வர்கள் இருவரும், பிரதேசசபைகளின் உறுப்பினர்கள் சிலரும் புலிகளின் கொலை வெறிக்கு இலக்காக்கப்பட்டதும், அனைத்து உறுப்பினர்களுக்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப் பட்டிருப்பதும், குடாநாட்டின் உள்ளூராட்சி நிர்வாகத்தைப் பாதித்துள்ள முக்கியகாரணியாகும்.

இந்த நிலையில் பத்தாண்டுகளுக்கு முன்னர் வடக்கு கிழக்கு மாகாணசபையை சீர்குலைத்த புலிகளின் செயற்பாட்டையும், உள்ளூராட்சி நிர்வாகங்களை சீர்குலைக்கும் புலிகளின் எத்தனங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது பயன் பொருத்தமானது.

**வடக்கு கிழக்கு மாகாணசபை**

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பெறுபேறாக 1978ம் ஆண்டின் அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் நாடெங்கும் மாகாண சபைகள் அறிமுகமாக் கப்பட்டன. ஏனைய மாகாணங்களில் மாகாணசபைகள் நிறுவப்பட்ட பின்னரும், கூட வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாகாணசபையை நிறுவுதற்கு விடுதலைப் புலிகள்விரும்பவில்லை.

புலிகளின் விருப்பத்திற்கு மாறாக மாகாணசபை நிர்வாகத்தைப் பொறுப்பேற்கபலரும் தயங்கினர். மாகாணசபையை நிறுவி அதன் மூலமாக இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழான கிடைக்கக் கூடிய அனுகூலங்களை தமிழ் மக்களுக்கும் கிடைக்கச் செய்ய த.வி.கூட்டணி உட்பட பல் வேறு அரசியல் சக்திகளும் தயக்கம் காட்டிய சூழ்நிலையிலேயே ஈ.பி.ஆர்.எல்.எவ் அதற்கான முன்முயற்சிகளைமேற்கொண்டது.

வடக்கில் தேர்தல்கள் இடம் பெறாத போதும், கிழக்கில் முஸ்லீம் காங்கிரஸ், ஐ.தே.க ஆகியன தேர்தல்களத்தில் ஈடுபட்டிருந்தன. ஈ.பி.ஆர்.எல்.எவ் பெரும் பான்மை பலத்துடன் மாகாணசபையை அமைத்த போதும் பல்வேறுமுட்டுக் கட்டைகளை எதிர்நோக்கியது.

அதிகாரப்பகிர்வை நடைமுறைப் படுத்த முன்வராத கொழும்பு அரசின் போக்கு, மாகாணசபை முறையின் மீது மக்களுக்கிருந்த அவநம்பிக்கைகள், இந்தியப் படைகளின் பிரசன்னம் காரணமாக பேரினவாதிகள் மத்தியில் எழுந்த கூக்குரல்கள், என்பன வற்றுடன் சேர்த்து விடுதலைப் புலிகளின் மூர்க்கமான எதிர்ப்பு என்பன போன்றவற்றை எதிர் கொண்டே மாகாணசபையை நிறுவவேண்டியதாயிற்று.

எனினும் சபை நிறுவப்பட்டதன் மூலமாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாக அலகின் கொண்டுவரப்படவும், வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் மக்களின் சரித்திரபூர்வமான வாழிடம் என்பதை ஏற்றுக்கொள்ளப்படவும், வழிவகுக்கப்பட்டது. மக்களின் நலன்கள் என்ற அடிப்படையிலிருந்து மாகாண ஆட்சியை நிறுவிய ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி எல்லைகளைக்கடந்து அனைத்து தரப்போடும் நட்புப்பாராட்டியது. சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் அரவணைப்பைப் பெறவும் விழைந்தது.

இருந்தும், மாகாணசபை ஆட்சி முறையின் அனுகூலங்கள் தமிழ் மக்களுக்கு கிடைப்பதை விடவும், தமிழ் மக்களுக்கு ஒரு மாற்றுத்தலமை வந்து விடக்கூடாது என்பதிலேயே விடுதலைப்புலிகள் முனைப்பாக இருந்தனர்.

இதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் பின் மீதான அரசியல் எதிர்ப்பு மாகாண சபையை சீர்குலைப்பதையே இலக்காகக் கொண்டது. சிறீலங்கா அரசின் முட்டுக்கட்டைத்தன மான போக்கு, மக்களின் நம்பிக்கையீனம், புலிகளின் மூர்க்கத்தனமான எதிர்ப்பு என் பவற்றிற்கு மத்தியில் செயற்பட்ட போது ஈ.பி.ஆர்.எல்.எவ்பும் சில தவறுகளை இழைக்க நேர்ந்தமை தூரதிஸ்டவசமானது. மனம் வருந்தத்தக்கது.

மாகாணசபையை சீர்குலைப் பதையும், இந்தியப்படையினரை வெளியேற்றுவதையும் நோக்கமாகக் கொண்டு விடுதலைப்புலிகள் பிரேமதாசா அரசுடன் இணைந்து கபடநாடகம் ஆடினர். இதன் பெறுபேறாக 1990ல் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கான அரசியல் தலமைத்துவம் இல்லாது போயிற்று.

சிறீலங்காவின் ஏனைய ஏழு மாகாணங்களும் மாகாணசபைகளின் கீழான அதிகாரப் பரவலாக்கத்தைக் கேட்காத போதும், இன்று வரையும் அதன் பலாபலன்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆனால் வடக்கு கிழக்கின் தமிழ் பேசும் மக்கள் அதிகாரிகளால் நிர்வகிக்கப்படும் மாகாண சபையின் கீழ் வாழ வேண்டிய தூரதிஸ்ட நிலமை வாய்த்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணசபையின் அரசியல் தலமைத்துவத்தை சீர்குலைத்து, ஆயுத முனையில் தலைமைத்துவத்தை நிலை நாட்டியவர்கள் கடந்த ஒன்பது ஆண்டுகளில் மக்களுக்கு பெற்றுத் தந்துள்ள அரசியல் பெறுபேறுகள் என்ன என்பது இன்றாவது எண்ணிப்பார்க்கப்பட வேண்டியதாகும்.

**மக்களின் மனநிலையில் மாற்றம்**

இடம்பெயர்ந்து செல்லும் அகதி வாழ்க்கையும், உணவுக் காகவும், மருந்துப் பொருட்களுக் காகவும் ஏங்கித் தவிக்கும் நிலையும், அடிப்படை வாழ்க்கைவசதி களுக்காககை ஏந்தும் சூழலும் ஒன்பது ஆண்டுகால ஆயுதப் போரின் பெறுபேறாக மக்களுக்கு எஞ்சியுள்ளது.

இந்தியா-இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பாக 651 போராளிகளை காவு கொடுத்த தாகக் குறிப்பிட்டிருந்த புலிகளின் இன்றைய உயிரிழப்பு10,000 ஐயும் கடந்துவிட்டது.

இது தவிர பொதுமக்களின் உயிரிழப்புக்கள், உடமை இழப்புக்கள் உடல் ஊனமடைந்தவர்கள், எனப்பலவகையான பாதிப்பு களை சுமக்க வேண்டிய நிலமைக்குள் மக்கள் தள்ளப் பட்டுள்ளனர்.




இவை தவிர கிராமப் புறங்களைக்கைவிட்டு நகரங்களுக்குள் முடங்க வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு குறிப் பாக திருகோண மலை, மட்டக் களப்பு மாவட்டங்களில் வாய்த் துள்ளது. விவசாயம், மீன்பிடி போன்ற கிராமப் புற பொருளாதார வாழ்க்கை சீர்குலைந்துள்ள தால் நிவாரணங்களை நம்பி வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை லிங்கநகர் போன்ற இடங்களில் திட்டமிட்டவகையில் மேற்கொள்ளப்படும் குடியேற்றத் திட்டங்களை முறியடிக்கக்கூடிய அரசியலதிகாரம் தமிழ் மக்களின் கைகளிலிருந்து பிடுங்கப்பட்டுள்ளது.

எனவே தான், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தூரநோக்கற்ற அரசியல் வழிகாட்டல்களிலிருந்து அந்நியப்படத் தலைப்பட்டனர். கிளாலிக் கடலையும் கடந்து வரும்படி விடுதலைப் புலிகள் விடுத்த அழைப்பை நிராகரித்து மீண்டும் வலிகாமத்தில் குடியேறின்ர்.

சிறீலங்கா இராணுவத்தின் பாதுகாப்புக்கு மத்தியிலும் அமைதியான வாழ்வு சாத்தியமாகலாம் என்று எண்ணினர். இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டதன் பின்னரே ஜனநாயக வழியில் செயற்படும் தமிழ் அரசியல் கட்சிகள் யாழ்ப்பாண மண்ணில் நிலைகொள்ள முடிந்தது. மக்களின் இந்த மனநிலை மாற்றத்தைச் சகித்துக்கொள்ள முடியாமை காரணமாகவே விடுதலைப்புலிகள் ஜனநாயக அரசியல் கட்சிகள் மீது அவதூறான பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து வருவதுடன் துப்பாக்கி முனையினால் துடைத்தழிக்கும் கைங்கரியத்திலும் ஈடுபட்டு நிற்கின்றனர்.

**குடாநாட்டில் உள்ளூராட்சி அமைப்புக்கள்**

குடாநாட்டில் உள்ளூராட்சி அமைப்புக்கள் விடுதலைப்புலிகளின் காலத்திலும் கூடத் தொழிற் படத்தான் செய்தன. கிராம சபை, பட்டின சபை முறை ஒழிக்கப் பட்டு பிரதேச சபைகள் ஆரவார மின்றி அமுல்படுத்தப்பட்டன.

விசேட ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ், சிறீலங்கா அரசின் ஊதியம் பெறும் ஊழியர்களால் அவை எந்தத் தடங்கலுமின்றிச் செயற்பட்டன. இவை திறம்படச் செயற்பட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதே அப்போது புலிகளின் எதிர்பார்ப்பாவும் இருந்தது எனலாம்.

ஆனால் கடந்த ஆண்டில் உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான தேர்தல்களை நடத்தியதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயக அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் விடுதலைப்புலிகளுக்கு அவை வேம்பாகக் கசக்கின்றன.

தமது தலமைத்துவம் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுவதை அல்லது கேள்விக்குள்ளாக்கப்படுவதை சகித்துக் கொள்ள புலிகள் விரும்பாதமைதான் இதற்கு முக்கிய காரணமாகும்.

உள்ளூராட்சி அமைப்புக்களை நிர்வகிப்பது மூலமாக இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது என்பது உண்மையே.




ஆனால் மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளில் ஒரு சிலவற்றையேனும் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கலாம்.

**முடிவுரை**

குடாநாட்டில் உள்ளூராட்சி அமைப்புக்களை நிர்வகிப்பதில் எதிர்நோக்கப்படும் சங்கடங்கள் உணர்ந்து கொள்ளப்பட வேண்டியவையாகும். புலிகளின் முட்டுக் கட்டை என்பது அதில் பிரதான மானது.

எனினும் கணிசமானளவுக்கு மக்களின் ஆதரவு, அரசாங்க ஒத்துழைப்பு, படையினரின் பிரசன்னம் என்பவற்றிற்கு மத்தியிலும் உள்ளூராட்சி அமைப்புக்களை திறம்பட செயற்பட வைக்க முடியவில்லை என்பது அவற்றின் தலமைத்துவங்களை ஏற்றவர்களின் இயலாமைகளையும் புலப் படுத்துவதாகவே உள்ளது.

இத்தகைய இயலாமைகளைக் களையும் வகையிலேனும், பகிரங்க அரசியல் களத்தில் ஈடுபட்டுள்ள சக்திகள் தமக்கிடையே ஐக்கியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். •

---

# பாதுகாப்புக்காக........ துன்பங்களைச் சுமக்கும் தங்பிட்டிய வெல

அம்பாறை மாவட்டத்திலுள்ளது தங்பிட்டிய வெல என்னும் குளம். இங்கு நீர் நிறைந்திருக்கும் அழகே தனி. இந்தக் குளத்தில் பிடிக்கப்படும் மீன்கள் இங்குள்ள வயல்களில் விளையும் அரிசியால் சமைக்கப்படும் சோற்றுடன் உண்பதற்கு மிகவும் ருசியானது.

ஆனால் இப்போது அந்தக் குளம் முன்னரைப் போல மகிழ்ச்சியாக இல்லை. பகல் வேளையில் கூட இங்கு நடமாடுவது பயப்பிராந்தியைத்தருவது. எந்தப் பக்கத்திலிருந்து ஆபத்து எந்த உருவத்தில் வருமோ என்ற அச்சத்தை ஊட்டுவது.

மட்டக்களப்பை அடுத்து வரும் காடுகளுக்குள்ளிருந்த எந்த வேளையிலும் மரணம் வரலாம். இந்தக் காடுகளுக்குள் துப்பாக்கி ஏந்திய புலிகளின் நடமாட்டம் இருக்கிறது. புலிகளின் வரவு குறித்து அச்சம் காரணமாக இராணுவமும், பொலீசாரும் முகாமிட்டுள்ளனர்.

ஒரு நாள் இக்குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தான் ஒரு சிங்கள இளைஞன். பொலீசார் அவனை அழைத்தனர். பாதுகாப்பு காரணங்களுக்காக இக்குளத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடு படுவது மேலிடத்திலிருந்து தடை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர். அதனைத்தொடர்ந்து மீன் பிடிப்பதும் நின்று போயிற்று.

எனினும், சில நாட்களின் பின்னர் பொலீசார் தமது உணவுத் தேவைக்காக மீன் பிடித்துத் தரும்படி கிராம வாசிகளிடம் கேட்டனர். கிராம வாசிகளும் தமது சொந்தப் பாதுகாப்பை மனதில் கொண்டு மீன் பிடித்துக் கொடுத்தனர். ஆனால் அதனால் மீனவர்களுக்கு எந்த லாபமும் கிட்டவில்லை.

இன்னமும், ஒரு நாள் பொலீசார் மீன்பிடித்துத் தரும்படி அழைத்தனர். எங்களது தேவைக்காகவோ, விற்பனைக்காகவோ மீன் பிடிக்க அனுமதி மறுக்கும் நீங்கள் உங்கள் தேவைக்காக மீன் பிடித்துத் தரும்படி கேட்பது எவ்வாறு நியாயமாகும் அந்தச் சிங்கள மீனவ இளைஞன் வினவினான்.

மீன்பிடித்து தராவிட்டால், பரவாயில்லை. நாங்கள் பின்னர் பார்த்துக்கொள்கின்றோம் என்பது பொலீசாரின் பதிலாக இருந்தது.

மூன்று நாட்கள் கழிந்தன. பொலீசார் அந்த இளைஞனின் வீட்டை முற்றுகையிட்டு தடை செய்யப்பட்ட பொருட்கள் இருக்கின்றனவோ, எனத் தேடுதல் நடத்தினர். அந்த இளைஞன் மீதும், அவனது தந்தை மீதும், இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

கஞ்சா வைத்திருந்தாக தந்தை மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆபாசப் பிரசுரங்கள் வைத்திருந்ததாக மகன்மீது குற்றம் சுமத்த ப்பட்டது. ஆனால் இத்தகைய ஆபாசப் பிரசுரங்கள் முகாம்களில் சாதாரணமாக காணப் படுகின்றன என்பதை அனைவரும் அறிவர்.

சிங்கள மூலம் எல்.ஜி. புஞ்சிஹேவா,
நன்றி; எல்லைப்புற கிராமக்கிராமங்கள் பற்றிய ஆய்வு அறிக்கை.

## தமிழ் தகவல் தொடர்புத்துறை

# மக்களின் நம்பிக்கைகள் சிதறடிப்பு

ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினை வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூன்றாவது சக்தியொன்றின் தலையீடு பற்றி வலியுறுத்தப்பட்டு வந்தது.

1983 இன வன் முறையின் பின்னர் காலஞ்சென்ற திரு அமிர்தலிங்கம், தோழர் பத்மநாபா போன்ற தலைவர்களும் மற்றும் பல்வேறு தலைவர்கள், சமூகப் பிரமுகர்களும் ஈழத் தமிழர் பிரச்சினையின் பரிமாணங்களை இந்திய மக்களுக்கும் குறிப்பாக தமிழ் நாட்டு மக்களுக்கும் அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகளுக்கும் எடுத்துக் சொல்வதில் பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்.

மறுபுறம் 1983 இனவன் முறையை அடுத்து தமிழர்களின் உயிர் உடைமைப் பாதுகாப்பை வலியுறுத்தி அன்றைய பாரதப் பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்கள் குரல் கொடுத்ததும் அன்றைய வெளியுறவுச் செயலர் பார்த்த சாரதி அவர்கள் இங்கு விஜயம் செய்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆளும் கட்சி எதிர்க்கட்சி ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தியதும் நாம் அறிந்ததே. தமிழ் பிரதேசங்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் பற்றியதாகவே அப்பேச்சுவார்த்தை அமைந்தது.

பின்னர் 6வது திருத்தச்சட்டத்தின் மூலம் பிரிவினைக் கோரிக்கைக்கு தடை விதித்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கச் செய்யப்பட்டதும் அறியாததல்ல.

ஆயுதமேந்திய விடுதலை இயக்கங்களின் செயற்பாடுகள் அதிகரித்தும் இந்தியாவினதும், சர்வதேச சமூகத்தினதும் ஆதரவு பெருகியதை அடுத்தும் இலங்கை அரசு மீதான அழுத்தம் அதிகரித்தது.

பூட்டானின் தலைநகர் திம்புவில் இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் தமிழர் அரசியல் கட்சிகள், இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. அனைத்துத் தமிழர் தரப்பும் ஒருமித்த குரலில்.

- ★ **தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தை அங்கீகரி.**
- ★ **சுயநிர்ணய உரிமையை அங்கீகரி.**
- ★ **தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரி.**
- ★ **மலையக மக்ளின் அடிப்படை உரிமைகளை அங்கீகரி என்று வலியுறுத்தின.**

ஆனால் அரசு தீந்தைபூசப்பட்ட மாவட்ட சபைகளைத் தவிர வேறெதையும் அங்கீகரிக்கத் தயாராக இருக்கவில்லை.

தமிழ் அரசியல் இயக்கங்கள் தாம் வலியுறுத்திய 4கோரிக்கைகளிலும் உறுதியாக நின்றிருந்தன.

பின்னர் ஏகப்பிரதிநிதி என்ற சர்வாதிகார கோசத்தின் கீழ் சகோதரத் தமிழர் இயக்கங்களின் மீது படுகொலைத்தாக்குதல்களை ஆரம்பித்தன் விளைவாக தமிழர் பிரச்சினை தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தை அரங்கு பலவீனமடைந்தது.

பெங்களூரில் புலிகள் தனியாக இந்திய மத்தியதத்துடன் ஜெயவர்த்தனா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திய போதும் அது எவ்வித முக்கியத்துவமுமற்றுப் போனது.

**தமிழர் இயக்கங்கள் பலவீனப் படுத்தப்பட்ட வடகிழக்கில் இலங்கை அரசின் இராணுவம் மேலாதிக்க நிலையையடைந்த போது தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினடிப்படையில் இந்தியாவின் தலையீடு நடைபெற்றது.**

இந்திய அரசு சகல தமிழர், அரசியல் கட்சிகளையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடாத்தியது.




ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தினடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாணசபைக்கு இடைக் கால அரசொன்றை அமைப்பது பற்றிப் பேசப்பட்டது. அதிலும் 99வீதம் புலிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட இடைக்கால அரசு அமைப்பது பற்றியே பேசப்பட்டது.

சுதுமலையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தியாவின் பங்களிப்புப் பற்றியும் நேருவின் கொள்கைகள் பற்றியும், அணிசேரா இயக்கம் பற்றியும் கூட வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பேசினார்.

இடைக்கால நிர்வாகத்தில் ஒரு சில இடங்களை தமிழர்விடுதலைக்கூட்டணிக்கும், ஈழப்புரட்சி அமைப்புக்கும் பகிர்ந்தளிப்பது பற்றியும் பேசப்பட்டது. ஏனைய தமிழர் இயக்கங்களுக்கு எதுவித முக்கியத்துவமும் வழங்கப்படவில்லை.

ஆனால் இந்தியாவிலிருந்து படகில் வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பலாலியில் அடைத்து வைக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் சயனைட் அருந்தித் தற்கொலை செய்ததையடுத்தே இந்திய அமைதிகாப்புப்படைக்கும் புலிகளுக்குமிடையே யுத்தம் ஆரம்பமானது.

**இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தின் பலாபலன்களை மக்களுக்குக் கிட்டச் செய்வதற்காகவும், மாகாணசபை முறையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சக தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டது.**

**அது ஒரு நடைமுறைசார்ந்த எதார்த்தத்தைப் புரிந்து கொண்ட நடவடிக்கையாகும்.**

**புலிகளின் கருத்துக்கள் செயற்பாடுகளுக்கேற்ப தமது உளப் பாங்கை வளர்த்துக்கொண்ட தமிழ் பத்திரிகைகள் பல அந்த முன் முயற்சியை இழிவுபடுத்தும் விதத்திலேயே நடந்துகொண்டன.**

தமிழ் மக்களின் இன்றைய நிலையை நாம் சற்று எண்ணிப் பார்ப்போமானால் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் மாகாண அரசாங்கத்தை அமைக்கும் முயற்சி எவ்வளவு தீர்க்க தரிசனமானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

**சகலவிதமான உள்கட்டமைப்புக்களும் அழிக்கப்பட்டு குடிமனைகள், தோட்டங்கள், வயல்கள் எல்லாமே பாழாகி, மீன்பிடித் தடையுடன் மக்கள் பல்லாயிரக் கணக்கில் உயிரழிவுகளைச் சந்தித்து எஞ்சியோர் முகமிழந்து தெருவிலும் அகதிமுகாமிலும் சீரழிந்த வாழ்வுடன் போராடிக் கொண்டிருக்கிறார்களே!**

**அரசின் தரப்பிலும், புலிகளின் தரப்பிலும் பிரமாண்டமான இரண்டு இராணுவ இயந்திரங்களே எஞ்சி நிற்கின்றன. இந்த இராணுவ யந்திரங்களும் சிறுவர்களையும், பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களையும் உள்ளடக்கியதாகவே அமைகின்றன. அறிவு, மானிட நேயம் எல்லாம் இங்கு ஒருவிதமான பெறுமதியுமற்றவை.**

தமிழ் தகவல் தொடர்புத்துறை இந்த யுத்தத்தில் புழகாங்கிதம் அடைவதாகவும் மக்களின் அன்றாடத்துயரங்களை விற்பனை செய்வதாகவுமே அமைகிறது.

புலிகளின் ஜனநாயக விரோதப் போக்கு பற்றியோ, ஆக்கபூர்வமான ஒரு தீர்வு பற்றியோ வலி

எஸ்.திருநாவுக்கரசு

யுறுத்துவதில்லை.

தமது மனச்சாட்சிக்கு நல்லதாகத் தெரியும் தீர்வுகளைக் கூட இவர்கள் கூறமாட்டார்கள். புலிகள் இன்று ஒன்றைக்கூறி பின்னர் முரணாக வேறொன்றைக் கூறினால் அந்த இரண்டிற்கும் இவர்கள் உடன்படுவார்கள்.

இது வெறும் ஊகம் அல்ல. கடந்த 15,16வருட பத்திரிகைகளை எடுத்து மேலோட்டமாகப் புரட்டினாலே இது புரியும்.

ஏதாவதொரு வல்லமை மிக்க சக்திக்கு அடிபணிவதே இவர்களின் கீழான மனநிலையாகும். அதற்கு தமிழ் இயக்கமென்ற ஒரு சொல் இருந்தால் போதுமானது.

இன்று தமிழ் மக்களின் அவல நிலையை எண்ணிப்பார்த்தால் மாகாண அரசாங்கம் என்பது பேரழிவுகளைத் தடுத்து நிற்கும் அம்சமாக இருந்தது. இந்தியாவை எப்போதும் ஈழத்தமிழருக்கு நண்பனாக வைத்திருக்கக் கூடிய நிலையை உள்ளடக்கியிருந்தது.

**இன்று தமிழ்ப்பத்திரிகை உலகம் ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யாராவது தேவதைகள் விண்ணிலிருந்து வருவார்களா என எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறது.**

1994ம் ஆண்டு இலங்கை அரசும் புலிகளும் பேச்சுவார்த்தையிலீடுபட்டபோதும் இப்பத்திரிகைகள் பெருநம்பிக்கைய்யை வெளிப்படுத்தின. ஆனால் புலிகள் பேசவேண்டிய பிரதானமான விடயமான இனப்பிரச்சினைத் தீர்வைத் தவிர்த்துக் கொண்ட போது அல்லது ஒரு தலைப்பட்சமாக பேச்சுவார்த்தைச் சூழ்நிலையைக் குழப்பிய போது இவர்களில் பெரும்பாலானோர் புலிகளின் பக்கமே நின்றிருந்தனர்.

நோர்வேயின் உதவியுடன் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரேலும் பேச்சுவார்த்தை நடாத்திய போதும் அது போன்ற முன்முயற்சிகள் இங்கும் தேவையென்று எழுதின.

சின்பெயினும், பிரித்தானிய அரசுப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போது அதைப்பார்த்து வானளாவப் புகழ்ந்து எமது அரசியல்வாதிகள் பார்த்துப் படிக்க வேண்டுமென்றார்கள்.

கொங்கொங் சீனாவுடன் சுதந்திரமாக இணைக்கப்பட்ட போது அதனையும் பாராட்டினார்கள்.

தென்னாபிரிக்காவில் ஆபிரிக்கத்தேசிய காங்கிரஸ் நிறவெறியாட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோது அதனைப் பார்த்து வியப்புக்குறி காட்டினார்கள்.

ஆனால் இலங்கையில் இனப் பிரச்சினை தீர்வு காண்பதற்கு உலகில் ஐ.நா சபையிலிருந்து சகல நாடுகளும் வரவேண்டும் என்று கோசமெழுப்புகிறார்கள்.

இவர்கள் தகவல் தொடர்புத் துறையினர் என்ற சுயாதீன நிலையில் நின்று இவற்றையெல்லாம் கூறினால் நாம் அதனை மனதார வரவேற்கிறோம். துரதிஸ்டம் என்னவென்றால் புலிகளின் நிகழ்ச்சி நிரலில் இருந்தே இவர்கள் சிந்திக்கிறார்கள். அதற்கப்பால் இவர்களின் சிந்தனை வெறுமையானது.

அதனால் தான் தமிழ்ப்பத்திரிகையுலகம் அன்றாடப் பிரச்சினைகளில் உழன்று கொண்டிருக்கிறது. தமிழ்மக்களுக்கு எத்தகைய தீர்வு சாத்தியப்படும் என்பதனை நடைமுறையோடு ஒட்டி ஒரு பத்திரிகை கூட ஆசிரியத்தலையங்கம் தீட்டியதில்லை.

அதே போல் பல தமிழ்த்தலைவர் படுகொலை செய்யப்பட்ட போது அவைபற்றிமௌனம் சாதித்தன. அல்லது ஈனஸ்வரத்தில்மிண்டி விழுங்கின.

இந்த நேர்மையீனம் தான் இன்று தமிழ்ச்சமூகத்தை படுகுழியில் தள்ளியுள்ளது என்றால் அதுமிகையல்ல.

பிரித்தானிய வெளிவிவகாரப் பிரதியமைச்சர் லியம்பொக்ஸ் வருகை தந்த போது பொதுஜன முன்னணி அரசும் ஐ.தே.கவும் இனப்பிரச்சினை தீர்வுவிடயத்தில் ஒத்துழைத்துச் செயற்படுவதென உறுதிமொழியளித்த போது வெகு முக்கியத்துவத்தை வழங்கினார்கள்.

இந்தியப் பிரதமர் வாஜ்பேய் இலங்கை வருகை தந்தபோது எதிர்பார்ப்புக்களை உருவாக்கியவர்கள்.

தென்னாபிரிக்க தூதுக்குழுவின் வருகையை பிரமாதமாகத் தெரிவித்த பத்திரிகைகளுக்கு இனப்பிரச்சினை தீர்வு பற்றி, ஜனநாயகம் பற்றிய கருத்துரு என்ன என்பதைப் பற்றி எப்போதும் கூறத் தவறிவிடுகிறார்கள்.

புலிகளைத் தேசபக்த இயக்கமாகச் சித்தரிக்கும் இவர்களுக்கு பெருமளவான இளைஞர்களின் மரணங்கள் வெறும் செய்திகளே.

**ஒரு காலகட்டத்தில் உண்மைகள் சமூகத்திற்கு மறைக்கப் பட்டதிலும், சமூகத்தை குழப்பத்தில் ஆழ்த்தியதிலும் இவர்கள் ஒரு குறிப்பிடத் தகுந்த பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்.**

வெறுமனே அன்றாடப் பிரச்சினைகளைச் சொல்வது என்ற பத்திரிகையுலகப் போக்கு தகுதியற்ற பலரைப் பத்திரிகையாளர்களாக்கியுள்ளது.

புலிகள் தவிர்ந்த ஏனைய மாறுபட்ட சமூக அரசியல் இயக்கங்களை இவர்கள் தேசத்துரோகிகளாகவும், பிழைப்புவாதிகளாகவும் தான் சித்தரிக்க முயன்றுள்ளனர்.

யுத்தத்தை வைத்து பிழைக்கும் தமிழ்ப் புதிய முதலாளிகளைப் பற்றி, கடத்தல் காரர்களைப் பற்றி இவர்களால் ஏற்படும் மரணங்கள் பற்றி சீரழிவுகள் பற்றி மூச்சுக் காட்டுவதில்லை.

தொடர்ச்சி 11ம் பக்கம் ☞


# ஒற்றுமைக்கான தடைக்கற்கள்; இனங்காண்பதே ஐக்கியத்தின் முதற்படி!

தமிழ் அரசியற் கட்சிகளுக்கு இடையில் ஒற்றுமை இல்லை. ஒரு மித்த கருத்துக்களும் இல்லை. ஒன்றுபட்ட செயற்பாடுகளும் இல்லை. ஐக்கியம் இல்லை. இது பெரும்பான்மையினரான தமிழ் மக்களின் கவலை. இது அர்த்த முள்ளதுதான்.

குடாநாட்டிற்குப் போக்குவரத்து வசதிகள் இல்லை. கிழக்கில் சீரான மின்சாரம் இல்லை. வன்னிப் பகுதியில் உணவுப் பொருட்கள் கூட இல்லை. இவ்வாறாகப் பல இல்லைகளுக்கு மத்தியில் இன்னல் படும் தமிழ் மக்களின் சேம நலன்கள் குறித்து அக்கறையுடைய எவரும், தமிழ் அரசியல் கட்சி களுக்கிடையே நிலவும் ஐக்கிய மின்மை குறித்து விசனிக்கவே செய்வார்கள்.

சந்தேகப்பார்வைகளால் துளைக்கப்படும் நெருக்கடிக்குள் சிக்குப்படுபவர்களும், தடுப்புக் காவல்களுக்குள் தள்ளப்படுபவர் களும், கூட ஐக்கியம் பற்றி ஆர்வம் காட்டவே செய்வர். எனினும், போர் முனையில் மட்டுமன்றி, அரசியற் களத்திலும் வேறுபட்டு நிற்பதற்கான காரணங்கள் குறித்து பலரும் அக்கறை காட்டு வதாக இல்லை.

வெறுமனே சுயநலச் சிந்த னைகள் தான் ஐக்கியத்திற்கு தடையாக இருக்கின்றன என்ற மேலோட்டமான கருத்துக்களுடன் திருப்தி காண்கின்றனர். இந்த நிலையில் தமிழர் அரசியற்


தலைவர் வே. பிரபாகரன்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
அவர்கட்கு,

இணைந்து செயற்படுதல்

ஈழப்புரட்சி அமைப்பின் பொதுக்குழுவானது 05.02.1990 முதல் 07.02.1990 வரை மேற்கொண்ட விசேட சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவது பற்றியும், பாதுகாப்பு பற்றியும் எமது துணையமைப்பான ஈழவர் ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பற்றியும் மேற்கொண்ட முடிவுகளை இக்கடிதம் மூலம் தங்களுக்கு தெரியப்படுத்துவதுடன், எமது கடந்தகால செயற்பாட்டின் சுருக்கமான விபரத்தையும் இங்கு தெரியப்படுத்த விரும்புகிறோம்.

1984ஆம் ஆண்டு எமது அமைப்பு தேசிய விடுதலை தொடர்பாகக் கொண்ட நிலைப்பாட்டின் அடிப்படையில், சக விடுதலை இயக்கங்களுடன் உறவைப் பேணிவந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உறவானது வட-கிழக்கிலும், சென்னையிலும் நடைமுறை ரீதியான புரிந்துணர்வுடனும், நெருக்கத்துடனும் விளங்கி வந்திருக்கிறது.

ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்பு ஒப்பந்தம் தொடர்பான ஒரே நிலைப்பாட்டை நாம் கொண்டிருந்தபோதும் ஒக்டோபர் 10இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இந்தியப் படைகளுக்குமிடையில் திடீரென ஏற்பட்ட மோதலின்போது எமது இயக்கமானது சில காலங்களுக்கு சோர்வுற்றுப்போனது. இக்காலங்களில் இந்திய [illegible] இயக்கங்களும்

கிழக்கு பகுதிகளில் நிலைகொண்டு மாகாண சபையில் அங்கத்துவம் வகித்த இயக்கங்களிடமிருந்து எம்மைத் தற்காத்துக்கொண்டோம்.

இந்தியப்படைகள் வெளியேற ஆரம்பித்ததன்பின் தமிழ்த் தேசிய இராணுவம் என்ற பெயரில் இயங்கிய குழுக்கள் செயலிழந்துபோக நாம் எமது எதிர்கால செயற்பாடு குறித்து மேற்கொண்ட முடிவுகள் பின்வருமாறு:

1. 1984இல் நாம் மேற்கொண்ட கொள்கை முடிவுகளுக்கிணங்க அதை வலுப்படுத்தும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்த உடன்பாட்டின் அடிப்படையில் இயங்குதல்.
2. வட, கிழக்கு மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் ஏற்படுத்தப்படும் பாதுகாப்பை முழுமையாக ஏற்று ஒத்துழைப்பு வழங்குதல்; அதற்கு ஏதுவாக எமது [illegible] பாதுகாப்புப்படையை நீக்கி அவை கொண்டுள்ள ஆயுதங்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வழங்குதல்.
3. எமது அமைப்பின் துணையமைப்பான ஈழவர் ஜனநாயக முன்னணி பாராளுமன்றத்தில் கொண்டுள்ள 13 ஆசனங்களையும் இராஜினாமா செய்து பாராளுமன்றத்தை விட்டு வெளியேறுதல்.

போக்கில் கடந்த இருபதாண்டு காலத்திலும் இடம்பெற்றவைகள் குறித்து ஒரு மீள் பார்வை செய் வது பொருத்தமானதாகும்.

குறிப்பாக தமிழ் அரசியல் சக்தி களுக்கிடையே ஒற்றுமை, ஐக்கியம், என்பன நிலவிய சந்தர்ப்ப ங்கள் பற்றியும், அவை எவ்வாறு சீர் குலைந்தன என்பதையும் எண் ணிப்பார்ப்பது தேவையானதாகும். எவரையும் குறைகாண்பதோ, அல்லது எவர் மீதும் வசைபாடு வதோ, நோக்கமாக இல்லாத போதும் உள்ளதை உள்ளபடி உரைத்து பார்ப்பது காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

மக்களின் நிகழ்கால நலன் கள் குறித்து பொறுப்புணர்வுடன் சிந்திக்க முற்படும் எவரும் கடந்த காலத்தை விமர்சனம் செய்து பார்ப்பதைக் குறைகாண முடியாது.

**முதலாவது ஐக்கியம்.**

எழுபதாம் ஆண்டில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்தது. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமரானார். மூன்றிலிரு பங்கு பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வந்த அரசு, புதிய அரசியலமைப்பை வரையும் முயற்சிகளில் ஈடுபட்டது. அதற் காக பாராளுமன்றத்தையே அரசி யல் நிர்ணய சபையாக மாற்றியது.

அப்போது தமிழ் மக்கள் மத் தியில் செல்வாக்கு பெற்ற கட்சி களாக தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் விளங்கின. இவை தவிர தமிழர் சுயாட்சிக் கழகம், அடங்காத் தமிழர் முன்னணி, போன்ற கட்சிகளும் செயற்பட்டு வந்தன. மலையகத்தின் இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ், இலங்கைத் தொழிலாளர் கழகம் என்பன உட்பட பல்வேறு சக்திகளும் இணைந்து 1972ல் தமிழர் கூட்டணியை உருவாக்கின.


புதிய அரசியலமைப்பிற்கான எதிர்ப்பியக்கமும், தமிழின உணர் வைத்தூண்டுவதும், இந்த ஐக்கி யத்தைச் சாத்தியமாக்கியிருந்தது. இவ்வாறாக பெரும்பாலானவர் கள் ஐக்கியம் கண்டிருந்தபோதும் கூட மாற்றுக் கருத்துக்களும் நிலவி வந்தது. அடிப்படைப் பிரச் சினைகளுக்கான தீர்வை நோக்கிய எதிர்ப்பியக்கம் வலுவாக இருந்த போதும், அரசியலுரிமைகளை விட பிரதேச அபிவிருத்தியை முன் எடுப்பதே முக்கியமானது என்று கருத்தும் நிலவியது.

பாராளுமன்ற உறுப்பினர்களாக இந்த அருளம்பலம், தியாகராசா போன்றவர்கள் அரசியல் உரிமை கள் விடவும் அபிவிருத்திப் பணி களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்ட போது பலத்த விமர் சனங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

புதிய அரசியலமைப்பு ஆறு அம்சங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென தமிழர் கூட்டணி வலியுறுத்தி வந்தது. இந்தக் கோரிக்கை அரசாங்கத் தரப் பினால் கண்டு கொள்ளப்படாத நிலையே நீடித்தது.

அதேவேளை இளைஞர்கள் மத்தியிலிருந்து அரசாங்க எதிர்ப்பு செயற்பாடுகள் தீவிரமாகின. 1971ஏப்ரல் 5 கிளர்ச்சியை அடுத்து நாடு முழுவதும் அமுலில் இருந்த அவசரகால நிலையின் கீழ் தமிழி ளைஞர்கள் கைது செய்யப்படு வதும், தடுத்து வைப்பதுமான நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

இத்தகைய சூழ்நிலைக்கு மத் தியில் காங்கேசன்துறை இடைத் தேர்தலில் கூட்டணிக்கு கிடைத்த மாபெரும் வெற்றியை அடுத்தும், இளைஞர்கள் மத்தியில் வளர்ந்து வந்த உணர்ச்சிப் பெருக்கிற்கு ஈடுகட்டும் வகையிலும் தமிழர் கூட்டணி தமிழர் விடுதலைக் கூட்டணியாகியது. தனிநாடு தான் தமிழர் பிரச்சினைகள் அனைத்துக்குமான தீர்வு என்ற உணர்ச்சி ஊட்டப்பட்டது.



எனினும் தனி நாடு என்ற இல ட்சியத்தை எட்டு வதற்கான செயற் திட்டங்கள் எதனை யும் கூட்டணித் தலைமை வகுத்து விடவில்லை. "ஏசியா வீக்" என்ற ஆங் கில வார சஞ்சிகை யின் கொழும்பு முகவராக அப் போதிருந்த றொ பின் ஒஸ்போன் என்பவர் "இலங் கையில் தமிழர்க ளின் கனவுகளும் திட்டங்களும்" என்ற தலைப்பில் எழுதி யிருந்த கட்டுரை யொன்றில் பின் வருமாறு குறிப் பிட்டிருந்தார்.

நிழல் தரும் சூழலில் ஒரு விடுதலை இயக்கத் தின் தலைவர்களை சந்திப்பது குறித்துவியப்பு தெரிவித்த அவர், எந்த அரசாங்கத்திற்கு எதிராக போராடுவதாக சொல்லிக்கொள் கிறார்களோ அந்த நாட்டின் தலைநகரில் எந்தக் கெடுபிடி களுமில்லாமல் சாதாரணமாக அவர்களால் வாழமுடிகிறது. ஆக இங்கு முக்கிய மானது என்னவெனில் தனிநாடு என்பது அடையப்படக்கூடிய ஒரு இலக் காக இல்லை என்ற எண்ணம் கூட்டணித் தலமைக்குள் இருந் திருக்காலம் என்பதுவே.

ஆனால் உணர்ச்சி ஊட்டப்பட்ட மக்களும், இளைஞர்களும் தனி நாடு என்ற கோரிக்கையின் பின் னால் அணி திரண்டனர். இது ஒரு ஐக்கியமாகப் பரிணமித்தது.

1977 பொதுத் தேர்தலின் முடிவுகள் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட தமிழர் தரப் பின் ஏகப்பிரதிநிதிகள் என்ற நிலைக்கு உயர்த்தியது.

பாராளுமன்றத்தில் பதினேழு ஆசனங்கள் பெறப்பட்டு ஒற்று மையின் பலம் பிரகடனப்படுத் தப்பட்டது. எனினும் வடபகுதியில் ஏற்பட்டளவுக்கு கிழக்கில் அப் போது தமிழின ஒற்றுமை பிரகட னப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இராச துரைக்கு எதிராக காசி ஆனந்தன் தேர்தல் களத்தில் செயற்பட்டமை ஒருபுறமிருக்க ஐ.தே.கவின் சார் பாக நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் வெற்றிபெற்றது.

தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் எவரும் வெற்றி பெறாதது, பொத்துவிலில் தெரி வான கனகரட்ணம் கட்சி மாறியது எனப் பல பின்னடைவுகள்.

ஆனாலும் இந்த ஐக்கியப்பட்ட நிலமை கூட நீண்டகாலம் நீடித்துவிடவில்லை. தமிழீழத் தனிநாடு என்பது அகிம்சை வழியில் சாத்தியமாகாது என உணர்ந்த நிலையில் ஆயுதம் ஏந்திய எதிர்ப்பியக்கம் தோன்றியது. அரசாங்க தரப்பின் ஒடுக்கு முறை அதிகரிக்க அது வளரச் செழிப்பான சூழ்நிலை வாய்த்தது. தமிழீழ விடுதலைப் புலிகளும், ஈரோசும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மித வாதப்போக் கைக் கண்டித்து தீவிரவாதப் போக் கில் முன்சென்றன.

**மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் அறிமுகமும், அரசியல் குழப்பங்களும்**

1979ல் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் திட்டம் ஜே.ஆர். ஜெய வர்த்தனா அரசால் முன்வைக்கப் பட்டது. அதேவேளை ஆயுத மேந்திய எதிர்ப்பியக்கத்தை பயங் கரவாதம் எனப்பிரகடனம் செய்து பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்க தலைமை யில் இராணுவ நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன

தமிழீழ விடுதலைக்கான போராட்டத்தை மழுங்கச் செய்யும் சூழ்ச்சியாகவே மாவட்ட அபிவி ருத்திச்சபைகள் அப்போது இளை ஞர்களால் நோக்கப்பட்டது. ஆனால் கூட்டணி இவற்றை தமிழீழத்திற்

**காரணம் எதுவாக இருப்பினும் ஐக்கியம், ஒற்றுமை என்ற உணர்வுகளுக்கு முதன் முதலில் வேட்டு வைத்தவர்கள் விடுதலைப்புலிகளே யாவர்.**

கான முதற்படியாக வர்ணித்தது.

இந்த அடிப்படை வேறுபாடு ஒரு புறம். இராணுவ அடக்கு முறையை எதிர்கொள்ளும் வித த்திலான தந்திரோபாய மாறுபா டுகள், அரசியல் சூழ்நிலையைக் கையாளும் விதம் குறித்து அபிப் பிராய பேதங்கள் மறுபுறம். முரண் பாடுகள் தலைதூக்கின.

தமிழர் விடுதலைக்கூட்டணி யிலிருந்து, தமிழீழ விடுதலை அணிதோன்றியது. தமிழ் இளைஞர் பேரவைக்குள்ளும் விடுதலை அணி உருவாகியது. அதே வேளை தமிழீழ விடுதலைப் புலிகளி லிருந்து தமிழீழ மக்கள் விடுத லைக்கழகமும், ஈரோசிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கமும் தோற் றம் பெற்றன.

ஒவ்வொரு அமைப்பும் தத்த மக்கென கொள்கை, கோட்பாடு களை வரித்துக்கொண்டதோடு போட்டி போட்டுச் செயற்பட்டன. அரசாங்கத்திற்கு எதிரான செயற் பாடுகள் என்ற வகையில் இரக சியப் பொலிசார் மீதான தாக்கு தல்கள், வங்கிக்கொள்ளைகள்

செல்வா

பொலீஸ் நிலையங்கள் மீதான தாக்குதல்கள் என இவை விரிந்தன.

போட்டி இயக்கங்களுக்கிடை யிலான முரண்பாடுகள் மோதல் களாக மாறின. ஒருவரை ஒருவர் அழிக்கும் வகையிலான செயற் பாடுகள் முளைவிட்டன. இதன் உச்சகட்டம் 1982மே 20அன்று சென்னை பாண்டி பஜாரில் இடம் பெற்றது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உமா மகேஸ்வரன், ஜோதிஸ்வரன், சிவனேஸ்வரன் ஆகியோர் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரபாகரன் சிவகுமார் ஆகியோர் துப்பாக்கிப் பிரயோ கம் செய்தனர். இச்சம்பவத்தில் ஜோதீஸ்வரன் என்ற கண்ணன் காயமடைந்த போதும் எவரும் உயிரிழக்கவில்லை.

சென்னையின் மக்கள் நட மாட்டம் மிகுந்த பாண்டி பஜாரில் இச்சம்பவம் நடைபெற்றதைத் தொடர்ந்து அனைவரும் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப் பட்டனர்.

இது தவிர இலங்கைத் தமிழி ளைஞர்கள் தங்கியிருந்த இடங்கள் பலவும் தமிழகப் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டன. அதேவேளை இலங்கையில் தேடப்படுவர்கள் இவர்களெனக் கூறி நாடு கடத்தப் படவேண்டும் எனக் கொழும்பு புதுடில்லிக்கு அழுத்தம் கொடுத் தது.

☞

எனினும் வெளிநாடுகளில் வாழ்ந்த தமிழ் மக்களின் அமைப்புக்கள் பலவும் சிறீலங்கா அரசின் கோரிக்கைக்கு இந்தியா செவி சாய்க்கக் கூடாது எனக்குரல் எழுப்பின. இந்தக் குரல்களுக்கு இந்தியா மதிப்பளிக்கும் வகையில் செயற்பட்டது.

**அருளரின் முயற்சி**


பாண்டி பஜார் சம்பவத்தையடுத்து தமிழ் சக்திகளுக்கிடையே ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் லங்காராணி அருளர் எனப்படும் அருளப்பு றிச்சர்ட் அருட்பிரகாசம் என்பவர் ஈடுபட்டார். ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், புளொட் அமைப்புக்களுக்கு மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஒரு இடத்தில் சந்தித்துப் பேசும் நிலை தோன்றிய போதும் ஐக்கிய முன்னணி எதுவும் மலர்ந்து விடவில்லை. இந்த அமைப்புக்கள் மத்தியில் ஐக்கியம் உருவாகி, ஒன்றுபட்டுச் செயற்படும் நிலை தோன்றினால் அதன் பின்னர் தாங்கள் இணைவது குறித்து சிந்திக்கலாம். எனத்தெரிவித்த கடிதமொன்றுடன் விடுதலைப்புலிகள் நின்று கொண்டனர்.

இதேவேளை 1982ல் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல்கள் இடம் பெறலாம் என்று எதிர்பார்த்த உமாமகேஸ்வரன், தேர்தல்களில் போட்டியிடுவதன் மூலமாக அரசியல் தலைமைத்துவத்தை பெற்றுக்கொள்ளும் எண்ணத்தைக் கொண்டிருந்தார்.

ஐக்கிய முன்னணியை இந்த கருத்தை மையப்படுத்திக்கட்ட வேண்டும் என அவர் முயன்றார். ஆனால் பாராளுமன்றத் தேர்தல் சர்வசனவாக்கெடுப்பால் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.

ஜூலைக் கலவரத்தையடுத்தும், அரசியலமைப்பிற்கான ஆறாவது திருத்தச்சட்டம் அமுலுக்குவந்ததையடுத்தும், தமிழீழ அரசியல் அமைப்புக்கள் பலவும் சென்னையில் மையம் கொண்டன. சென்னையில் அனைத்து இயக்கங்கள் மத்தியிலும் ஒற்றுமையை உருவாக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.


1. குறைந்தபட்ச வேலைத் திட்டங்களை உருவாக்குவதற்கான எமது அரசியல் ரீதியான அடிப்படைக் கொள்கைகள் :

1. ஸ்ரீலங்காவின் ஆதிக்கத்திலிருந்து எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுத்தல.
2. தமிழீழ விடுதலை தவிர்ந்த வேறெந்த குறைந்தளவான சமரசத்துக்கும் இடமளிப்பதில்லை.
3. எமது மக்கள் அனைவரையும் இணைத்த ஆயுதப் போராட்டத்தை எமது போராட்டப் பாதையாகக் கொள்ளுதல்.
4. சுதந்திர தமிழீழத்தில் சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.
5. அமெரிக்கா ஏகாதிபத்தியத்தில நவகாலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசத்தை விடுவித்தல்.

2. தற்போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள குறைந்தபட்ச வேலைத் திட்டங்கள் :

1. ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு எதிரான எமது ஆயுத போராட்ட நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி செயற்படுத்துதல.
2. வெளிநாடுகளின் பிரச்சாரங்களை கூட்டாக மேற்கொள்ளுதல.
3. எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான தனி நபர்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் பொது நிதியைத் திரட்டி அதனை ஒரு பொதுக் குழு மூலம் நிர்வகித்தல்.

இத்துடன், இக் கூட்டமைப்பு மேலும் விரிவு பட்டு வலுப்பெற எமது மக்களின் விடுதலைக்காகப் போராடும் ஏனைய இயக்கங்களையும் இக்கூட்டமைப்பில் இணைந்து செயற்பட வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகிறோம். இதற்கு ஏனைய அனைத்து இயக்கங்களையும் ஒத்துழைப்பு தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ சபாரட்ணம் | பாலகுமார் | பத்மநாபா |
| செயலதிபர் | ஈழப் புரட்சியமைப்பு | செயலதிபர் |
| தமிழீழ விடுதலை | புரட்சிகர நிறைவேற்றுக்குழு | ஈழ மக்கள் புரட்சிகர |
| இயக்கம் | சார்பாக. | விடுதலை முன்னணி. |

ஆயுத மேந்திய எதிர்ப்பியகத்தை மேற்கொண்ட அமைப்புக்களுடன் அரசியல் ரீதியில் கருத்து உடன்பாடு காண்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணி பின்நின்றது.

ஆயுதமேந்திய எதிர்ப்பியக்கத்தை மறுதலிக்காத அதேவேளை அரசியல் பேச்சுக்களில் அவை உள்வாங்கப்படுவதை கூட்டணித் தலைமை அப்போது விரும்பியிருக்கவில்லை. “பெடியங்கள் போராடட்டும், நாங்கள் அரசியல் பேரம் பேசுவோம்” என்பதுவே அப்போது கூட்டணியின் கருத்தாக இருந்தது. இதனால் ஐக்கியம் மலரவில்லை.

**ஈழ தேசிய விடுதலை முன்னணியின் உதயம்.**

1984ல் ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் ரெலோ அமைப்புகள் இணைந்து ஒரு முன்னணியை உருவாக்கின. மிகவும் நெகிழ்ச்சித்தன்மையுள்ள குறைந்தபட்ச வேலைத்திட்டங்களின் அடிப்படையில் உருவான இம் முன்னணி ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டது. சுமார் ஒரு வருட காலமாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளின் விளைவாக தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்த முன்னணியில் அங்கம் பெற்றனர்.

இயக்கங்களுக்கிடையிலான ஐக்கியமும், அரசியல் இராணுவ அழுத்தங்களும், இந்தியாவின் தூண்டுதல்களும் காரணமாக 1985ல் சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தை மேசைக்கு வர நிர்ப்பந்திக்கப்பட்டது. பூட்டான் நாட்டின் தலைநகர் திம்புவில் பேச்சுக்கள் இடம்பெற்றன. இந்தப் பேச்சுக்களின் போது ஈழ தேசிய விடுதலை முன்னணியின் கருத்து வரம்புகளுக்கு அப்பாற்பட்டு தமிழர் விடுதலைக்கூட்டணியும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகமும் கூட செயற்படவில்லை. ஐக்கியம் என்ற அணையைக் கடந்து அரசியற் திணிப்புகள் எதுவும் ஊடுருவி விடஇயலவில்லை.

**ஐக்கியத்தின் சிதைவு**

1986ன் மே மாதத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை அடுத்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி சிதைந்தது. தலைவர் சிறிசபாரத்தினம் உட்படப் பல நூறு போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அமைப்பு சிதறடிக்கப்பட்டது.

ஆக காரணம் எதுவாக இருப்பினும் ஐக்கியம், ஒற்றுமை என்ற உணர்வுகளுக்கு முதன் முதலில் வேட்டு வைத்தவர்கள் விடுதலைப் புலிகளே ஆவர். அதனைத் தொடர்ந்து புளொட்டும் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கமும் புலிகளால் தடை செய்யப்பட்டன.

சிறீலங்கா அரசுக்கு எதிராகப் போராடும் உரிமை தமக்கு மட்டுமே இருப்பதாகப் புலிகள் பிரகடனம் செய்து கொண்டனர். எனினும் சிறீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்ட போது அதனைத் தடுத்து நிறுத்திச் சமாளிக்கும் பலம் புலிகளுக்கு இருக்கவில்லை. இதனாலேயே இந்திய அரசின் நேரடித் தலையீடு ஏற்பட்ட போது அதனை வரவேற்க வேண்டிய நிலை புலிகளுக்கு ஏற்பட்டது.

**தனியரசு என்பது சாத்தியமாகாத கனவு என உணரப்படுவதும், ஆயுதமேந்திய எதிர்ப்பியக்கத்தால் அழிவுகளும், துயரங்களும் தான் தொடர்கதையாகிறது என்பதால் அது நிறுத்தப்பட்டு உயிரழிவுகள் தவிர்க்கப் படவேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்படுவதும், எந்தத்தரப்பினரும் தத்தம் எண்ணங்களை வெளியிடும் அரசியலுரிமைக்கு உத்தரவாதம் வழங்கப்படுவதும் தான் இன்றைய தமிழ் அரசியல் சூழலில் ஐக்கியம் ஏற்படுவதற்கான அடிப்படையாகும்.**

அரசியற் தூர நோக்குடனும், மக்கள் நலன் சார்ந்த பொறுப்புணர்வுடனும் இவற்றை அணுக வேண்டிய நிலையில் இருந்த புலிகள் மோதல் போக்குகளையே கைக்கொண்டனர். அதனால் மக்கள் பல்வேறு வகையிலும் துன்பச் சுமைகளைச் சுமக்க வேண்டியதாயிற்று.

**ஈரோசின் கதை முடிவு.**

தமிழீழ விடுதலைப் புலிகள் மாற்று இயக்கங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும் ஈரோஸ் தொடர்ந்தும் செயற்பட்டது.

1986 டிசம்பரில் பெங்களூர் பேச்சுவார்த்தைகளுக்காக புலிகள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்த போது தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைமைத்துவம் விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட்டதாக அறிவித்த ஈரோஸ் இயக்கம் 1987ல் இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட சூழலிலும் விடுதலைப் புலிகளை அனுசரித்தே செயற்பட்டது.

இந்தியப்படையினர் நிலை கொண்டிருந்த காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதமேந்திய எதிர்ப்பியக்கத்தைக் கண்டிக்கவில்லை. வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தில் பங்கேற்கவில்லை.

சிறீலங்கா அரசுக்கு அனுசரணையாகச் செயற்படவில்லை. எனினும் 1989 பொதுத் தேர்தலில் பங்குபற்றி பதின்மூன்று பாராளுமன்ற ஆசனங்களை வென்றெடுத்தன் மூலம் ஒரு சக்தியாக உருவெடுத்தது. அப்போதும் கூட பதவிகள் வாய்த்துவிட்டது என்பதற்காக நாற்காலிகளில் ஒடிப் போய் உட்கார்ந்து விடவில்லை.

பிரேமதாசா அரசாங்கத்துடன் புலிகள் மோதலை ஆரம்பித்ததையடுத்து அனைத்து ஆசனங்களும் வெறிதாக்கப்பட்டன. எனினும் இவையெல்லாம் கூட விடுதலைப்புலிகளைத் திருப்திப்படுத்திடவில்லை. இதனாலேயே 1990 ஆகஸ்ட்டில் ஈரோஸ் அமைப்பு கலைக்கப்பட வேண்டியதாயிற்று.

ஆக ஈரோசின் வரலாற்றின் மூலம் புலப்படுத்தப்பட்ட உண்மையாதெனில் புலிகள் மட்டுமே அரசியல் சக்தியாக இருக்க வேண்டும் என்பதுவே அவர்களின் விருப்பம் என்பதே.

**தலைமையின் இயலாமை**

தமிழ் மக்கள் குறிப்பாக குடாநாட்டு மக்கள் விரும்பியோ, விரும்பாமலோ இந்த நிலமையை ஏற்றுக்கொண்டிருந்தனர் என்பது உண்மை. கோட்டை, கொக்காவில், மாங்குளம், கொண்டச்சி எனப் பல இராணுவ முகாம்கள் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டன. இராணுவரீதியாக தமிழ் ஈழம் வென்றெடுக்கப்பட்டு விடலாம் என்றே குடாநாட்டு மக்கள் பலரும் நம்பினர்.

ஆனையிறவு மோதலும், பூநகரிச்சண்டையும் இன்னபிறவுமாக சம்பவங்கள் தொடர்ந்த போது நம்பிக்கைகள் வலுத்தன. 1994ன் பொதுத் தேர்தலின் போது வாக்களிக்கும் உரிமையைப் பொதுமக்களுக்கு புலிகள் வழங்காததைக் கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் இராணுவ ஆற்றல் மூலம் படையினர் தோற்கடிக்கப்பட்டு விடுவர் என்றே கனவு கண்டனர்.

ஆனால் அது நடைபெறவில்லை. சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவுற்றதையடுத்து மீண்டும் போர் ஆரம்பமானது. முன்னேறிப்பாய்ந்த படையினரை புலிப்பாய்ச்சல் முறியடித்தது. ஆனால் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை இடம் பெற்றதைத் தடுக்க முடியவில்லை.

அப்போதும் கூட விடுதலைப் புலிகளின் தலைமைத்துவ ஆற்றல் மீதும் இராணுவ வலிமை மீதும் நம்பிக்கை இழக்காத நிலையிலேயே நாவற்குழிப் பாலத்தைக் கடந்து கட்டிய துணியோடு பல்லாயிரக்கணக்கான மக்கள் கைதடியை வந்தடைந்தனர்.

பிரபாகரனின் சொல்லைச் செவி மடுத்து மக்கள் அனைவரும் ஒரே பேரணியாக இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர். மக்களில்லாத மண்ணைத்தான் படையினரால் கைப்பற்ற முடிந்ததாக புலிகள் மெச்சிக்கொண்டனர்.

ஆனால் என்ன நடந்தது? கிளாலிக் கடற்கரைவரையும் பயணம் தொடர்ந்த போதும், அப்பாலும் கடந்து செல்ல மக்களுக்கு இயலவில்லை. எனவே தான் 1996 ஏப்ரலில் மக்கள் மீண்டும் வலிகாமம் திரும்பினர். தலைமைக்கு கட்டுண்டு வெளியேறிய மக்களின் நலன்களைப் பேண முடியாத துப்பாக்கிகளின் நிழலில் தஞ்சம் புகுவதற்கு மக்கள் விரும்பவில்லை.

அரசியல் உரிமைகளை பெறுவது என்ற கற்பனையில் அன்றாட வாழ்க்கை அலைக்கழிக்கப்படுவதை மக்கள் விரும்பவில்லை.

ஆனால் மக்களின் சேமநலன்களைவிட போராட்டம் தான் முக்கியம் என்பதுவே புலிகளின் நிலைப்பாடாகியுள்ளது. தூரத்தில் பிரகாசமான எதிர்காலம் இருக்கலாமென நம்பி நிகழ்காலத்தைப் பலியிடும் துணிவும், நம்பிக்கையும் இப்போதும் மக்களுக்கு இல்லை.

**இன்றைய நிலைமை**

விடுதலைப்புலிகள் மட்டும் தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள், அவர்கள் மட்டும் தான் போராடுகிறார்கள் என்று நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் கூட தமிழ் ஈழம் தான் முடிந்த முடிவு என்ற நிலைப்பாட்டில் இப்போது இல்லை. புலிகளும் அரசாங்கமும் பேச்சவார்த்தைகளில் ஈடுபட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதுவே பரவலான எதிர்பார்ப்பு.

இவ்வாறானதொரு பேச்சுவார்த்தை நடைபெறுமாயின் அது தனித்தமிழ் ஈழம் அமைப்பதற்கானதாக இருக்க முடியாது. அதேவேளை விடுதலைப்புலிகளின் இராணுவ பலம் எந்தளவுக்கு பெருக்கம் எடுத்திருப்பினும் யுத்தத்தின் மூலம் தமிழ் ஈழம் அமைக்கப்படலாம் என்பதும் முடியாத காரியமாகி விட்டது.

சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிரான தார்மீகக் கோபமும், அதன் அடிப்படையில் தமிழ் ஈழத் தனிநாடு அமைக்கப்படலாம் என்ற ஆதங்கமும் ஆங்காங்கே பலருக்கும் அடிமன ஆசைகளாகவுண்டு. இதனாலேயே இல்லாத ஊருக்கு இருட்டினில் வழிதேடும் வகையில் தொடரப்படும் நடவடிக்கைகளுக்கு மானசீக ஆதரவு வழங்குபவர்களாகவுள்ளனர். போர் தொடரப்படுவதை விரும்பும் அதே சமயம் அந்தப் போரில் நேரடிப் பங்குதாரர்களாக மாற முடியாமலிருக்கும் நிலமையின் காரணமாக போலித்தனம் மேலோங்கியுள்ளது.

எனவேதான், தனியரசு என்பது சாத்தியமாகாத கனவு என உணரப்படுவதும், ஆயுதமேந்திய எதிர்ப்பியக்கத்தால் அழிவுகளும், துயரங்களும் தான் தொடர்கதையாகிறது என்பதால் அது நிறுத்தப்பட்டு உயிரழிவுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்படுவதும், எந்தத் தரப்பினரும் தத்தம் எண்ணங்களை வெளியிடும் அரசியலுரிமைக்கு உத்தரவாதம் வழங்கப்படுவதும் தான் இன்றைய தமிழ் அரசியல் சூழலில் ஐக்கியம் ஏற்படுவதற்கான அடிப்படையாகும்.

அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமைத்துவத்தை கேள்விக்கு உள்ளாக்கும் வகையிலான விமர்சனத்தை வெளிப்படையாக முன்வைக்காத வரை தமிழ் அரசியல் சக்திகளுக்கிடையிலான ஐக்கியம் என்பதும் விருப்பத்திற்குரிய கனவாகவே இருக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஏனைய அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு ஐக்கியத்தை கட்டியெழுப்ப ஏனைய அமைப்புக்களால் இயலவில்லை என்பதும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியதே.

# ஊர் திரும்பும் நாளை எண்ணி ஏங்கும் இதயத்துடன்.......

"நான் அவர்களை மன்னிக்கப் போவதும் இல்லை. மறக்கப் போவதும் இல்லை." ஏனெனில் எனது வாழ்க்கை சீர்குலைந்து போனது அவர்களால் தான். உணர்ச்சிப் பிழம்பாகக் கூறினான் அவன். நீண்டகாலத்தின் பின்னான சந்திப்பு. இக்காலப்பகுதிக்குள் தான் எத்தனை சம்பவங்கள். எத்தனை துயரங்கள். "எடேய் மச்சான்! உன்னை உயிரோட சந்திப்பன் எண்டே நான் எதிர்பார்க்கவில்லை எனக்குறிப்பிட்டபோது அவனது கண்களில் நீர்ததும்பியது.

## தியாகம் என்பது செத்துப் போவது என்பதல்ல மக்களின் நலவாழ்வுக்காக துன்ப துயரங்களைச் சுமந்தபடியும் வாழ்வது தான் என்பதுவே எனது எண்ணம்.

1974ன் தமிழாராச்சி மாநாட்டின் இறுதி நாளில் இடம்பெற்ற அமளிதுமளிகளின் போது சிதறப்பட்டு ஓடி யாழ்ப்பாண கோட்டையின் அகழிக்குள் மறைந்திருந்த போதுதான் முதல் முதலாக அவனது முகம் அறிமுகம். அதன் பின்னர் 75மே 22ம் நாளில் பிரதான வீதியை மறித்து தந்தை செல்வநாயகம் தலைமையில் நடந்த வீதி மறிப்பின்போது உரையாடச் சந்தர்ப்பம் வாய்த்தது.

சந்திப்புக்கள் தொடர்ந்தது. வீதி மறிப்பு பிசுபிசுத்துப் போனதுக்கு கூட்டணித் தலைமை மீது கண்டனம் தெரிவித்த அவன் தீவிரமாக செயற்பட எண்ணங்கொண்டான். அகிம்சை வழியிலான சாத்வீகம் சரிவராது என்றான். துப்பாக்கிகளைத் தேடி அலைந்தான். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று உதடுகள் உச்சரிக்க பரந்து பட்ட மானுட நேசத்தோடு மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப் புறப்பட்டான்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மூலை முடுக்கெல்லாம் சுற்றித் திரிந்தான். புரட்சி, புரட்சி என்று முழங்கித் தள்ளிய இடதுசாரிகளைக் கண்டான். அவர்களோடு உறவு கொண்டதன் பயனாக ஒரு சுழல் துப்பாக்கியைப் பெற முடிந்தது. கையில் துப்பாக்கி கிடைத்த ஆனந்தத்தை அவன் மற்றும் சிலரோடு பகிர்ந்து கொண்டது விபரீதத்தில் முடிந்தது. அவனது கைக்கு கிட்டிய துப்பாக்கி கைமாறியது. புலோலி வங்கியின் கொள்ளையிடும் முயற்சிக்காக அது கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இதனால் இரகசியப் பொலீசார் இவனது வீட்டுக்கும் விரைந்தனர். அவனும் தலைமறைவாக வேண்டிவந்தது. சில காலத் தலைமறைவு வாழ்வின் பின்னர் 1977 பொதுத் தேர்தல் சமயத்தில் சிறையிலிருந்தவர்கள் வீடு திரும்பியதை யடுத்து இவனும் ஊர் திரும்பினான். மனம் விரும்பிய மங்கையை மணம் முடித்துக் கொண்டான்.

செம்மண் பரப்பில் தோட்டம் செய்தும், சுண்ணாம்புக் கற்களை உடைத்து நொருக்கியும் சீவனம் நடத்திய போதும் எண்ணங்கள் சமூகத்தைச் சுற்றியே வட்டமிட்டன அவனுக்கு. பயங்கரவாத தடைச்சட்டம் அறிமுகமாகி, படையினர் நிர்வாகம் திணிக்கப்பட்டு இளைஞர்கள் கொலையுண்டு வீசப்பட்ட காட்சிகள் சினத்தை மூட்ட, மீண்டும் பொது வாழ்விற்குள் புகுந்தான். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கிராமிய தொழிலாளர் சங்கத்துடன் இணைந்தான். பட்டி, தொட்டியெங்கும் நடந்து திரிந்து இன உணர்வைத் தட்டி எழுப்பவும், அமைப்பைக் கட்டி எழுப்பவும் பாடுபட்டான். இவ்வாறு பணி தொடர்ந்து கொண்டிருக்கையில் நாட்டை உலுக்கிய இனக்கலவரம் வெடித்தது. கடல் கடந்து சென்றவர்களுள் ஒருவனானான். எனினும் அங்கேயே தங்கிவிடாமல் மீண்டும் ஊருக்குள் ஊடுருவினான்.

ஈழப்போராளிகள் அமைப்புகளுக்குள்ளே நிலவிய ஜனநாயக மறுப்பு போக்கையும், சகோதரப் படுகொலைகளையும் கண்டு சீறினான். பகிரங்கமாகவே கருத்துக்களை வெளியிட்டு மக்களை அணிதிரட்டப்பாடுபட்டான். இந்த நிலையில் 1986ன் டிசம்பரில் அமைப்பைத்

### இலை மறைகாய்

தடை செய்வதாகப் புலிகள் பிரகடனம் செய்தனர். புலிகளிடம் சரணடையாமல் தலைமறைவானான். மண்ணை விட்டுத் தப்பித்து ஓடாமல் ஓலைக்கூரைகளும், மாட்டுத் தொட்டில்களும் அபயமளிக்க 1987இன் இறுதிப்பகுதிவரை தினசரி மரண அவஸ்தைக்குள்ளும் வாழ்க்கையை நகர்த்தினான். வீடு தேடி வந்த இரகசியப் பொலீசாருக்கு மட்டுமன்றி, பதுங்குமிடம் வரை விரட்டி வந்த புலிகளுக்கும் தலைமறைவாக வாழ்ந்தது ஒரு போராட்டம் தான்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட போதும் அதனைத் தொடர்ந்து இந்தியப் படையினருடன் மோதல்கள் தொடர்ந்த போதும் இவனும் செம்மண் பரப்பிற்குளேயே மௌனமாக நிலை கொண்டு நின்றான்.

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண அரசு நிர்மாணிக்கப்பட்டது. அந்நியப்படையினரின் துணையுடன் ஆட்சி நடத்துவதை விரும்பாமலும், புலிகளைப் பழிவாங்கக் கூடாது எனக் கருதியும் ஒதுங்கியிருந்தேன். ஆனாலும் எனது சிந்தனையின் தவறு இந்தியப் படையினரின் வெளியேற்றத்தின் பின்னர் தான் எனக்குள் உறைத்தது.

யாழ் குடாநாட்டுக்குள் பிரவேசித்த புலிகள் எனது இருப்பிடம் எதுவென்று மீண்டும் தேடினர். பலர் காணாமற்போன கதையை அறிந்த நான் மீண்டும் தலைமறைவானேன்.

பதினெட்டு வயதும் நிரம்பாத சிலர் துப்பாக்கிகள் சகிதமாக வந்து எனது குடும்பத்தவர்களை என் இருப்பிடம் கேட்டு மிரட்டும் வரை நான் யாழ்ப்பாணத்திற்குள்ளேயே வாழ்ந்தேன். அதன் பின்னரும் அங்கிருக்க முடியாதென உணர்ந்து தலைநகர் கொழும்பு நோக்கித் தள்ளப்பட்டேன். என்னை வீடு தேடி வந்து மிரட்டிய நாதனும், அக்காச்சியும், சிறைவாசனும் இப்போது என்னவானார்கள் என்பது பற்றிக் கவலைப்பட எனக்கு இயலாது. வெளிநாட்டுக்குப் போய்விட்டதாக கதை பரப்பியே என் மீதான அவர்களின் தேடுதலைத் தணிக்க முடிந்தது.

ஆனாலும் ஓடித்தப்பியவர்கள் என்றே என்னைப் போல பலரும் தூசிக்கப்பட்டனர். வீரமில்லாத கோழைகள் என்று விமர்ச்சிக்கப்பட்டனர். ஆனாலும் தியாகம் என்பது செத்துப் போவது என்பதல்ல மக்களின் நலவாழ்வுக்காக துன்ப துயரங்களைச் சுமந்தபடியும் வாழ்வது தான் என்பதுவே எனது எண்ணம்.

1991ன் முற்பகுதியில் எனது குடும்பத்தினர் என்னைச் சந்திப்பதற்காக கொழும்புக்கு வருவதற்கே பெரும் சிரமப்பட நேர்ந்தது. பாஸ் பெறுவதற்காக பல தடவைகள் அலைக்கழிய வேண்டியிருந்தது. கொழும்பில் இருக்கும் தமிழ்க்கட்சிகள் சுகபோக வாழ்கை அனுபவிப்பதாகத் தான் பெரும்பாலான தமிழ் மக்களும் கருத்துக் கொண்டுள்ளனர்.

ஆனால் கொழும்புக்கு வந்து சேர்ந்த எனது குடும்பத்தினரை திருப்பி யாழ்ப்பாணம் அனுப்பவும், இங்கு தங்க வைக்கவும் பணம் இல்லாமல் நாங்கள் பட்ட வேதனைகளும், அனுபவித்த துயரங்களும் சொல்லும் தரமன்று. அவற்றை இப்போது நினைத்தாலும் கணகள் இரத்தத்தையே சொரியும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு இயல்பான வாழ்க்கை நிலவும் என்று உத்தரவாதம் ஏற்படுமானால், புலிகளின் துப்பாக்கிகள் என்னைப் போன்றவர்களைத் தீண்டாது என்ற நிலை வருமானால் எனது குடும்பத்தினருடன் ஊர் திரும்பவே விரும்புகிறேன்.

ஆனால் எங்களுக்கு இந்த உத்தரவாதத்தை யார் தர முடியும்? இருந்தாலும் நீண்ட காலத்திற்கு கொழும்பின் அறைகளுக்குள் நாங்கள் முடங்கிக்கிடக்க முடியாது என்பதைப் புலிகள் உணராவிட்டால் அவர்கள் மீது பழிவாங்கும் ஆவேசத்துடன் ஊர்திரும்பும் நிலை ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

# குடாநாட்டுத் தேர்தலும் வயாம்பாவும்

கடந்த வருடம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது கூட இப்படியொருவன்முறை நடந்ததில்லை. யாழ்ப்பாணம் துப்பாக்கிகள் பல பேருக்கு கதை சொன்ன இடமாக இருந்தது. பகைக்கும், பதவிக்கும் வேறுபலவிடயங்களுக்கும் துப்பாக்கிகளால் முடிவுகட்டப்பட்ட இடம். இருந்தபோதும் குறிப்பிடப்பட்ட சில சம்பவங்களைத் தவிரவே றெதுவும் நடந்ததில்லை. வடமேல் மாகாணசபை தேர்தலில் நடைபெற்ற சம்பவங்களை விட எண்ணிக்கையில் எவ்வளவோ குறைவாக யாழ்ப்பாண தேர்தலின் போது நடை பெற்றவன்முறைகள் காணப்படுகின்றன.

கடந்தவருடம் ஜனவரி முதல் பெப்ரவரி 18வரையிலான காலப் பகுதியே யாழ்ப்பாணம் உள்ளூராட்சி தேர்தலின் போது வன்முறைகள் நிகழ்ந்த காலப்பகுதியாகும். இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள பதின்மூன்று பொலிஸ் பிரிவுகளிலுமாக மொத்தம் எண்பத்தி ஒரு முறைப்பாடுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் வன்முறை கண் காணிப்பு நிலையத்தினரின் அறிக்கையொன்று கூறுகினறது.

இக்கண்காணிப்பு நிலையத்தாரின் அறிக்கையின்படி அக்கால கட்டத்தில் நடைபெற்ற தேர்தல் வன்முறைகளில் பாரிய சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லையெனவும் அவ் அறிக்கை மேலும் கூறுகின்றது.

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி தேர்தலில் பங்குபற்றிய கட்சிகளில் பெரும்பாலானவை பழைய போராளிக்குழுக்களாகும்.இவை தமக்கிடையே உள்ள தேர்தல் பகைகளை வன்முறை மூலம் சாதிக்க எண்ணவில்லை. அவர்களின் நோக்கம் அமைதியான வழியில் தேர்தல் நடைபெறுவதற்கான ஒத்துழைப்புகளை கொடுப்பதாக இருந்திருக்கலாம்.


**யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.**

அச்சுவேலி-1, சாவகச்சேரி 6, சுன்னாகம்-8, நெடுந்தீவு-5, இளவாலை-0, யாழ்நகர்-31, காங்கேசன்துறை-0, ஊர்காவற்துறை-21, கோப்பாய்-2, நெல்லியடி-1, பளை-3, பருத்தித்துறை 1, வல்வெட்டித்துறை-2 எதிலும் பதிவு செய்யப்படாதது 03 சம்பவங்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொலீசார் தற்பாதுகாப்பு நிலமைக்கு உள்ளிருந்து கொண்டு தான் செயற்பட்டனர். பொலீசாரின் சாதாரண நடமாட்டம் கூட மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது.

இவற்றையெல்லாம் விழுங்கினாற் போல் வடமேல் மாகாண சபையின் மாகாண சபைக்கான தேர்தல் பிரச்சாரங்களின் போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட வன்முறைச்சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையத்தார் கூறியுள்ளனர்.

இத்தேர்தலில் இலங்கையின் இரு பிரதான கட்சிகளிடையே பெரும் போட்டியே நடைபெற்றது. இரு கட்சியினரும் மாறிமாறி வன்முறைகளில் தாராளமாக ஈடுபட்டுள்ளதாகவே பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.




துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள், தீவைப்பு சம்பவங்கள், மறைந்திருந்து தாக்குதல் கொலைக்கான முயற்சிகள் என்பனவும் நடைபெற்றுள்ளது. இந்நாட்டின் தலைமையை மாறிமாறி எடுத்துக்கொண்ட இவர்கள் அதிகாரத்தினை கைப்பற்றுவதற்காக மிகவும் கேவலமாக நடந்து கொண்டமை இந்நாட்டுமக்களுக்கு இவர்கள் மேல் நம்பிக்கையீனத்தையே தோற்றுவிக்கும் செயலாகும்.

1997 இல் தென்னிலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போது நடைபெற்ற வன்முறைகளை விட இருமடங்கு அதிகமாக தற்போது நடைபெற்ற சம்பவங்கள் உள்ளதாக தேர்தல் கண்காணிப்பு நிலையத்தார் கவலை தெரிவித்துள்ளனர்.

பொ. ஜ. மு., ஐ.தே.க ஏட்டிக்கு போட்டியாக செயற்படுவதுடன் தங்கள் பலத்தினை இக்காலகட்டத்தில் காண்பிக்க வேண்டிய கடமைப்பாடும் அவர்களுக்கு இருப்பதாகவே தெரிகின்றது.

பொ.ஜ.முன்னணிக்கு இத்தேர்தல் முக்கியமான தொன்றாக கருதப்படுகின்றது. மாகாணசபைகளுக்கான கால அட்டவணையை வகுப்பதற்காகவும், பொ.ஜ. முன்னணி முன்வைத்துள்ள அரசியல் அமைப்பு சீர்திருத்த திட்டத்தை முன்னெடுத்து செல்வதற்கும் கடந்த காலத்தில் தனது ஆட்சிபற்றி மக்கள் அபிப்பிராயம் பெறுவதற்கும் இத்தேர்தல் முடிவு முக்கிய காரணியாக அமையுமெனவும் கருதப்படுகின்றது.

ஜனநாயகத்தையே பேசுகின்றோம், ஜனநாயகவழியிலே செயற்படுகின்றோம், ஜனநாயகத்தையே நாட்டுமக்களுக்கு போதிக்கின்றோம் என கூறிக்கொள்ளும் இவர்கள் ஜனநாயகத்தின் ஒரு அங்கமான மக்களின் வாக்குரிமைகளையும் அவர் தம் சுய சிந்தனைகளையும் நாசப்படுத்து மாப் போல் நடந்து கொள்வது எந்த வகை ஜனநாயகமாகிவிடும்.

மக்கள் வாக்குரிமை என்பது அவர்களது சொந்த சிந்தனைக் கேற்றாப்போலவே அவர்களை செயற்பட வைக்கவேண்டும். அவர்கள் உரிமையை யாருக்காவது அவர்கள் போட்டுவிட்டு போகட்டும். இதில் என்ன வன்முறை வேண்டிக்கிடக்கின்றது. அவருக்கு போடாதே இவருக்கு போடாதே எனச்சொல்லும் பண்பு ஜனநாயகப்பண்புகளல்ல.

தேர்தலில் சுயமாக மக்களை வாக்களிக்க விடவேண்டும். ஒருவர் வெற்றி பெற்றால் மற்றயவருக்கு தோற்கும் உரிமையாவது கிடைக்கவேண்டும். இதைவிட்டுவிட்டு வன்முறைகளில் இறங்கி அடக்க நினைப்பது எந்தவிதத்திலும் நியாயமாகிவிடாது.

தமிழ் அரசியற் கட்சிகள் தமக்கிடையேயுள்ள அபிப்பிராய பேதங்களை வெளிப்படுத்தும் போது கொச்சையாகவும் நையாண்டித்தனமாகவும் ஒற்றுமை பற்றிப் பேசுபவர்கள் வடமேல் மாகாணம் என்னும் வயாம்பாவை ஒரு தடவை திரும்பிப் பார்த்துக் கொள்வது நல்லது.


ஏ. ஸ்ரனிஸ்

# அந்நிய நாடுகளின் அரசியல் மரபுகள் தாயக மண்ணுக்கு அந்நியமா?

## - புலம் பெயராத ஒரு சிந்தனை.

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்பது பழமொழி. சிறு பொறியாய் ஆரம்பித்து பெருந்தீயாய் பற்றிப் படர்ந்த ஈழப்போராட்டமும் இன்று இந்த நிலமைக்கு வந்துவிட்டமையை, முழு வரலாற்றையும் மீள்பார்வை செய்யும் எவரும் புரிந்து கொள்ளலாம். ஏன் இந்த நிலமை? இது எவ்வாறு ஏற்பட்டது? இவையெல்லாம் இரவோடிரவாக ஏற்பட்ட திடீர் மாற்றங்கள் அல்ல.

இதற்கு பல காரணங்கள்




இருக்கக்கூடுமெனினும் புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பை மட்டும் இங்கு பார்க்கலாம். ஐரோப்பியநாடுகள், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா போன்ற பல நாடுகளிலும் இன்று இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இவர்களில் சுமார் தொண்ணூறு சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் அரசியல் தஞ்சம் கோரி அகதிகளாகச் சென்றவர்களாகும். இத்தகையவர்களில் பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மேற்தட்டினரும், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் என்பது குறிப்பிடத்தக்கது.

எழுபதுகளின் மத்தியில் ஆரம்பித்த தமிழர்களின் புலப்பெயர்வு படிப்படியாக அதிகரித்து 1983ல் உச்சத்தைத் தொட்ட போதும் இன்றுவரை தொடர்கதையாகிக் கொண்டேயிருக்கிறது. ஒவ் வொரு நாட்டிலும் எத்தனை பேர் வாழ்கிறார்கள் என்று எண்ணிக்கை கூறுவது பொருத்தமானதல்ல. எனினும் சில அகதிகள் அமைப்புக்கள் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் கவனத்திற்குரியன.

மலையக மற்றும் இஸ்லாமிய மக்கள் நீங்கலாக சுமார் 6,50000 பேர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். இவர்களில் சுமார் 1,30000 பேர் இந்தியாவிலும், கனடா மற்றும் அமெரிக்காவில் சுமார் 2,30000 பேரும், சுமார் 2,50000 பேர் ஐரோப்பாவிலும், சுமார் 40,000 பேர் அவுஸ்திரேலியாவிலும் வாழ்வதாகத் தெரிய வருகிறது.

இவர்களில் சுமார் தொண்ணூறு சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் அரசியல் அகதிகளாகவும், மிகுதியான சிறு தொகையினர் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றை நாடியுள்ளவர்களாவும் இருக்கின்றனர்.

இவ்வாறாக கணிசமான தொகையினர் புலம் பெயர்ந்தமைக்கான காரணங்களாக முன்வைக்கப்படும் சில விடயங்கள் வருமாறு.

1. சிறீலங்கா அரசாங்கத்தாலும், சிங்கள மக்களாலும் பாதிக்கப்பட்டதால் இலங்கையில் வாழ முடியாத நிலமை.

2. மாற்று அமைப்புக்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் புலிகளால் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்படுகின்ற நிலமை.

3. புலிகளுடன் ஒரு காலத்தில் தொடர்புடையவர்களாக இருந்த போதும் அமைப்புடன் அபிப்பிராய பேதம் கண்டதால் சந்தேகிக்கப்படும் நிலமைக்கு உள்ளானமை.

4. இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்தில் ஒதுங்கிச் சென்ற புலிகளின் ஆதரவாளர்கள்.

5. ஈழத்தமிழர்களெனக் கூறிக் கொண்டுவந்துள்ள சில தமிழகத்தவர்கள்.

ஈழத்தில் இடம்பெறும் போரினால் உயிராபத்தை எதிர்நோக்கியிருப்பதாக கூறிக்கொண்டு புலம்பெயர்ந்த நாடுகளில் இவர்கள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். இத்தகையவர்கள் அரசியல் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டு நிரந்தரமாக வாழும் அனுமதி பெறுவதில் பலத்த காலதாமதம் காணப்படுகிறது.

எனவே போர் முடிவுற்று அமைதி நிலை நாட்டில் ஏற்பட்டால் திருப்பி அனுப்பப்பட்டு விடலாம் என்ற அச்சம் இவர்களில் பலருக்குண்டு. இந்தச் சுய நல காரணத்திற்காக போரை ஆதரிக்கும் மனப்பாங்கிலுள்ளவர்கள் போரினால் மக்களுக்கு ஏற்படும் துன்ப துயரங்கள் பற்றிக் கண்டு கொள்ளாமல் போரைத் தொடரும் புலிகளுக்கு ஆதரவு காட்டு பவர்களாகவுள்ளனர். புலிகளும் இத்தகையவர்கள் மத்தியிலுள்ள பயவுணர்வை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர்.

அந்நிய நாட்டில் சுகபோக வாழ்வு தமக்கு கிடைக்கிறது என்பதற்காகவே புலிகளை வாழ்த்தும் நிலமையில் இவர்கள் வாழ்கின்றனர். "நீங்கள் இல்லையென்றால் இங்கு சுகவாழ்வு எமக்கேது" என்று லண்டனில் மாவீரர் தின வானொலிக் கவிதையரங்கில் கேட்ட குரல் இதற்கு ஒரு தகுந்த உதாரணமாகும்.

புலிகளின் வருடாந்த போர்ச் செலவில் சுமார் அரைப்பங்கிற்கும் மேலான தொகை புலம் பெயர்ந்த தமிழர்களிடமிருந்தே வசூலிக்கப்படுவதாகத் தெரிகிறது.

இவ்வாறு தமது இருப்பிற்காக புலிகளுக்கு ஆதரவு காட்டுபவர்கள் தாயகத்தில் புலிகளால் மக்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்கள் யாவும் விடுதலைக்கான போரில் தவிர்க்க முடியாதவை எனக்கூறிக்கொள்கின்றமை வேதனைக்குரியதாகும்.

இஸ்லாமியர்கள் வெளியேற்றப்பட்டமை, வலிகாமம் இடப்பெயர்வு, போக்குவரத்து சீர்குலைப்பு, மின் விநியோகச் சீரழிப்பு, அத்தியாவசிய சேவைகளில் பாதிப்பு என்பனபோன்ற இன்னோரன்ன செயல்களால் மக்களுக்கு ஏற்பட்டு வரும் துன்பங்கள் யாவற்றையும் அரசாங்கத்தின் இயலாமைகளாகச் சித்தரிப்பதிலேயே இத்தகையவர்கள் கவனம் காட்டுகின்றனர். இவற்றால் மக்களுக்கு ஏற்படும் துன்பங்கள் குறித்து கவலைப்படுவதாக இல்லை.

மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் செயல்களில் ஈடுபட வேண்டாம் எனப் புலிகளை நிர்ப்பந்திப்பதற்குப் பதிலாக புலிகளின் வீரம் எனக்கூறி மெச்சப்படும் நிலமையே காணப்படுகிறது.

ஈழத்துப் போர் முனையில் உயிரிழப்பவர்கள் தமது உற்றார் உறவினர்களின் மற்றும் இரத்த உறவுகளின் பிள்ளைகளாவும் இருக்கக்கூடும் என்பதைக் கூட உணராதவர்களாக தமது சொந்தப்பிள்ளைகளின் வளமான வருங்காலம் பற்றியே அதிகம் சிரத்தை காட்டுகின்றனர்.

ஆனால் தமது பிள்ளைகளைப் போல நம்மவர்களின் பிள்ளைகளும் வாழவேண்டும் எனக்கரிசனை காட்டாமல் தாயகமண்ணில் வாழ்பவர்களின் நிகழ்காலத்தைப் பணயம் வைத்து இனத்தின் எதிர்காலம் பற்றிய கற்பனைகளில் மூழ்குகின்றமைதான் கவலைக்குரியதாகும் "எமக்கென ஒரு தனிநாடு வேணும்" "அதற்கென போராடவேணும்" "போராட்டம் என்றால் இழப்புக்களும் இருக்கும் தானே" எனக் கனவான் தனமாகப் பேசும் இத் தகையவர்கள் சொந்த வாழ்வில் எந்தசுகத்தையும் இழந்துவிட தயாராக இருப்பதில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

தமிழ்த் தேசியவாதிகள், தமிழ் அபிமானிகள், தமிழின உணர்வு படைத்தவர்கள், என்ற முலாம்களுக்குள் சொந்த முகம் மறைத்தவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, ஐக்கிய தமிழர் அமைப்பு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்றெல்லாம் வெவ்வேறு பெயர்களில் தமிழ் மக்களிடமிருந்து செய்யப்படும் பணவசூல் புலிகளின் போருக்கான நிதியாககை மாறுகின்றது எனக்கூறப்படுகின்றது.

புலம் பெயர்ந்துள்ள தமிழர்களில் பலரும் தாம் வாழும் நாடுகளில் நிலவும் ஜனநாயக அரசியற் தன்மை, மக்களின் சேமநலன்களை அரசுகள் கையாளும் முறைமை, அரசாங்கத்தை தட்டிக்கேட்கும் மக்களின் துணிவு, நடைமுறையிலிருக்கும் நீதி, நியாய மரபுகள் பற்றி நன்கறிவர்.

எனினும் இத்தகைய நடைமுறைகள் தாயகத்திலும் மலர வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்துவத்குப் பதிலாக ஏகப்பிரதிநிதிகள் புலிகளே என்று ஜனநாயக மறுப்புக்கு துணை புரிபவர்களாகவே உள்ளனர்.

கடந்த காலத்தில் துப்பாக்கி முனையில் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவத்தை எடுத்துக் கொண்டவர்கள் மேற்கொண்ட முடிவுகளால் மக்களுக்குண்டான துயரங்கள், துன்பங்கள் குறித்து விமர்சன பூர்வமாகச் சிந்திப்பதைக் கூட குற்றமாகக் கருதும் போக்கே தலைதூக்கி நிற்கிறது.

இது தவிர தமிழ்ப்பள்ளிக்கூடங்கள், தமிழர் கலாச்சாரமன்றங்கள், கோவில்கள் என்பன போன்ற அமைப்புக்களும் பின்கதவுகளுக்கூடாக புலிகளுக்கு நல்வரவேற்பு வழங்குவதாகக் கூறப்படுகிறது. பத்திரிகைகள், வானொலிகள் என்ற முகமூடிகளுடன் புலிகளின் சாகசங்கள் பிரமாதப்படுத்தப்படுகின்றன. ஒரு வகையில் சொல்லப்போனால் சொந்த மக்களின் கண்ணீரையும் துயரத்தையும் சொந்தத் தேவைகளுக்கு விற்கும் நிலை எனலாம்.

எனவே வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்து வந்துள்ள எம்மவர்களே! நண்பர்களே! அன்பர்களே! புலிகளின் ஆதரவாளர்களே!

ஒரு கணம் சிந்தியுங்கள். ஆயுதம் தாங்கியபோர் என்பது அரசியல் எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு குறியீடு. முழுதான இராணுவ வெற்றி ஒன்றின் மூலம் அரசியற் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்பது அழகிய கனவாகவே இருக்க முடியும். இந்திய அரசின் அனுசரணையோடு பெறப்பட்ட அரசியல் நலன்கள் புலிகளின் பதவி மோகத்தாலும், புலம் பெயர்ந்தோரின் சுக வாழ்வுக்காகவும் பலியிடப்பட்டு விட்டது. இதனால் ஈழப்போராட்டமும் கழுதை தேய்ந்து கட்டெறுப்பானது போலாகிவிட்டது.

தனியரசுக்காக புலிகள் போராடுவதாகக் கற்பனை பண்ணிக் கொண்டு அரசியல் மற்றும் நிதிரீதியாகப் புலிகளுக்கு முண்டு கொடுப்பதென்பது உங்கள் தாயகத்தை நாசப்படுத்தும் செயலுக்கு அங்கீகாரமளிப்பதாகவே இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

செங்கதிரோன்
லண்டன்

# தேம்ஸ் நதிக்கரையிலிருந்து தேசத்திற்கு ஒரு மடல்

## தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிகளே! ஆதரவாளர்களே!

அன்பு வணக்கங்கள். "தமிழீழம்" என்ற தனிநாடு அமையவேண்டும் என்ற அசையாத நம்பிக்கையோடும், திடசித்தத்தோடும் பாடுபடும் உங்கள் தியாகசிந்தனையும், அர்ப்பணிப்பு உணர்வும் கண்டு கண்கள் கலங்குகின்றன. இது ஆனந்தக் கண்ணீரா? அல்லது நெஞ்சில் முட்டி மோதும் கவலைகளின் வெளிப்பாடா? என்பது பிரித்துப் பார்க்க முடியாதது. உங்களது கடினமான துயரமான வாழ்வும் சாவும் அர்த்தமுள்ளதாக இருக்கிறதா என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டுகின்றேன்.

கடந்த 15வருடப் போராட்ட வரலாற்றில் பல சம்பவங்கள் நிகழ்ந்து போய் விட்டன. போர்ச் செயற்பாடுகளுக்கான வேலைப்பளு, உள்ளேயே குடையும் சந்தேகவடு, தற்பாதுகாப்பு உணர்வு என்பன போன்ற பலவற்றுக்கு மத்தியில் சிந்திப்பதற்கு கூட உங்களுக்கு கால அவகாசம் இல்லாமல் இருக்கக்கூடும். எனவே கடந்த காலத்தில் தலைமையினால் இழைக்கப்பட்ட அரசியல் தவறுகளும், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களும் புலனாகாமல் போயிருக்கலாம். அவற்றைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுவதைக்கூடது ரோகத்தனம் என்று கருதி நீங்கள் ஆத்திரமடையக்கூடும்.

எனினும் முகம் காட்ட மறுக்கும் உங்களின் மீது கொண்டுள்ள அன்பும், இந்த மண்ணில் வாழ்வதற்காகவே பிறந்தவர்கள் தான் நீங்களும் என்ற உணர்வும், உங்களைப் போன்றவர்கள் அழிந்து விடக்கூடாது என்ற ஆதங்கமும், தான் இம் மடலை எழுதத்தூண்டுகின்றது.

**அன்பின் புலிப்படைப் போராளிகளே!**

உங்கள் நோக்கம், போராட்ட நிலைப்பாடு, தியாக மனப்பான்மை எதையும் குறை கூறுவது என நோக்கமல்ல. ஆனால் தலைமையின் அரசியல் தூர நோக்கற்ற வரட்டுத் தனமான பிடிவாதத்திற்கு நீங்கள் பலியாகிப் போகிறீர்களே என்றே கவலை கொள்கிறேன். திரும்பிப்பாருங்கள். குறிப்பாக இந்தியப்படையினர் திரும்பிப் போனபின் கடந்த ஒன்பது வருடங்களுக்கு தமிழீழப் பகுதிகளில் நிர்வாகம் நடாத்த முடிந்தது.

தமிழீழ நிர்வாக சேவை, காவல்துறை, நீதித்துறை எனப் பல நிர்மாணிக்கப்பட்டு தமிழீழம் கைக்கு எட்டிய தொலைவில்தான் என்ற கற்பனையில் மகிழ்ந்திருந்த நாட்களை எண்ணிப் பாருங்கள். நான்கு கோடி ரூபா பணத்தை தமிழக முதல்வர் எம்.ஜீ.ஆர் ஒரே நாளில் அள்ளித் தந்த ஆனந்தத்தில் மூழ்கியிருந்த அந்தக்காலத்தை நினைத்துப் பாருங்கள். பிரிவினை வாதிகளின் பயங்கர வாதம் என்று உங்கள் செயற்பாடுகளுக்கு உலகரங்கில் முத்திரை குத்திவிட அரசாங்கம் எடுத்த

தொடர்ச்சி 11ம் பக்கம் ☞

**இலங்கையின் புதிய அரசியலமைப்பு சட்ட வரைவுகளின், வார்த்தை அமைப்புக்கள் ஆக்கங்கள் பற்றி இந்தியா விலுள்ள அரசியல் அமைப்பு நிபுணர்களுடன் பேசி ஆலோசனை பெற நீதி அமைச்சு அதிகாரிகள் குழு புதுடில்லி சென்றுள்ளது. இது பற்றிய தங்கள் கருத்துக் கள் என்ன?**

*க. பிரதீபன் கொழும்பு.*

வெளிநாட்டுச் சட்ட வரைவுகள் எவ்வாறு உள்ளன என்பதை கற்றுக்கொள்வதில் தப்பில்லை. ஆனால் அதற்கு முதல் தமிழ் கட்சிகளுடன் முழுமையான பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தி அரசியல் தீர்வென்பது எவ்வாறிருக்க வேண்டும். அதற்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அவை எதுவும் இது வரை நடைபெறவில்லை. கூட்டணி தவிர்ந்த சகல தமிழ்க்கட்சிகளும் அரசு முன்வைத்த தீர்வுத் திட்டத்திற்கு திருத்தங்கள் முன்வைத்த போதும், அது பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பரிசீலணைக்கே எடுத்துக்கொள்ளப்படவில்லை. மாறாக அரசு முன்வைத்த தீர்வுத் திட்டத்தை மேலும் குறைப்பதற்கான ஐக்கிய தேசியக்கட்சியின் ஆலோசனைகளே பரிசீலணைக்கு எடுக்கப்படுகின்றன. இந்நிலையில் இந்தியச் சட்டவரைவையோ, தென்னாபிரிக்கச் சட்ட வரைவையோ ஆராய்வதால் பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை.

**யாழ்ப்பாணத்தின் உண்மை நிலவரங்கள் வெளிநாடுகளிலுள்ள அரசுகளுக்கு எட்டவில்லையே என்று கொழும்பிலிருந்து கொண்டு கவலைப்படும் தமிழ் கனவான்களின் அரசியல் பின்னணி எத்தகையது என்பதை விளக்குவீர்களா?**

*து. சந்திரமோகன் தாவடி, கொக்குவில்.*

வெளிநாடுகளிலும், சர்வதேச நிறுவனங்களிலும் வேலை செய்து ஓய்வு பெற்று தமது பிள்ளைகளையும் வெளிநாடுகளில் மிகவும் நல்ல முறையில் "செற்றில்" பண்ணிவிட்டு, தமது இறுதிக்காலங்களில் கொழும்பிலிருந்து அரசியல் பேசுபவர்களே இக்கனவான்கள். இவர்களைப் பொறுத்தவரையில் தமக்கோ தமது குடும்பத்துக்கோ எந்தப் பாதிப்பும் வராமல் பொழுது போக்காகவே அரசியலைக் கொண்டுள்ளார்கள். இதற்கு அவர்களுக்கு சரியான வழி அரசையும் ஏனைய தமிழ்க்கட்சிகளையும் விமர்சிப்பது. இதன் மூலம் தாமும் சமூகத்தில் ஓர் பிரபல அங்கத்தவராக இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்திக் கொள்வது. ஆனால் இவர்களின் பொறுப்பற்ற அறிக்கைகளும் செயற்பாடுகளும், தமிழ் மக்களை எவ்வாறு பாதிக்கும் என்பதை இவர்கள் சிந்திப்பதில்லை.

**கொழும்பில் ஆடம்பரமாக நடைபெற்று முடிந்த கம்பன் விழாவின் மூலம் சிறீலங்காவில் தமிழர்கள் அமைதியாக வாழவும், எமது மொழி, பண்பாடு என்பவற்றிற்காக விழா எடுக்கவும் முடியும் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது எனக்கருதுகின்றேன். ஆனால் யாழ்ப்பாணத்தில் எம்.ஜீ. ஆரை நினைவு கூருவது கூட துப்பாக்கி முனையில் தடுக்கப்படுகிறது. இந்த நிலையில் தமிழ் மக்களின் அமைதியான வாழ்வுக்கு குறுக்காக இருப்பது சிங்களப் பேரினவாதமா? புலிகளின் துப்பாக்கிகளா?**

*சு. ஆரோக்கியநாதன் உரும்பிராய்.*

புலிகளின் துப்பாக்கிகள் தான் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கான கேடயங்கள் என்று கருதுபவர்கள் இன்னமும் பலருண்டு. ஆனால் அவை தமிழ் மக்களை சந்தேகப் பிராணிகளாக்கியிருப்பதோடு, தமிழ் மக்களை சுதந்திரமாகச் சிந்திக்கத் தடைவிதிப்பவையாகவும் இருப்பது மறுதலிப்பே.

**கிழக்கு மாகாணத்திற்கான மின்சார விநியோகத்தைச் சீர்செய்ய விடுதலைப்புலிகள் அனுமதி வழங்கியுள்ளமை பாராட்டப்பட வேண்டியது தான் என்கிறேன். சொலமன் என்ன சொல்லப் போகிறார்?**

*க. தியாகராசா மட்டக்களப்பு.*

# சொலமன் பதில்கள்

வடக்கில் மாதிரிய கிழக்கிலும் மின்சாரத்தை சீர்குலைத்தது புலிகளே. இன்னைய காலகட்டத்தில் மின்சாரம் சீர்குலைத்து போனால் நாளாந்த வாழ்வே சீர்குலைந்து போகின்றது. ஆஸ்பத்திரிகள் இயங்க முடியாது, மக்களுக்கு நீர்வழங்கமுடியாது, மில்லுகள், தொழிற்சாலைகள் இயங்க முடியாது, மாணவர்கள் படிக்க முடியாது, மொத்தத்தில் அடிப்படை ஆதாரங்களே அற்றுப் போகும் சூழ்நிலை ஏற்படும். இதுதான் யாழ்ப்பாணத்திலும் ஏற்பட் டது. வன்னியிலும் ஏற்பட்டது. இன்று மட்டக்களப்பிலும் ஏற்பட்டது. எனவே மக்களின் கஷ்டங்களை உணராமல் மின்சாரத்தை சீர்குலைத்ததே தவறானது. இதில் மின்சாரத்தை வழங்க அனுமதி கொடுத்ததை பாராட்ட என்ன இருக்கின்றது. இப்படியான தவறுகளை இனிமேலும் செய்யாமல் இருந்தால் அதனை வரவேற்கலாம்.

**வடமேல் மாகாணத் தேர்தல் வன்முறைகள். குடாநாடு உள்ளூராட்சித் தேர்தல் வன்முறைகள் ஒப்பிடுக?**

*க. தியாகராசா புளிச்சாக்குளம் முந்தல்.*

யாழ்ப்பாணத்தில் ஆயுத அரசியலில் முன்னணி வகித்து ஜனநாயகப் பாதைக்கு திரும்பிய கட்சிகள் பல தேர்தலில் நின்றன. சில சில சம்பவங்கள் நடந்தாலும், ஆயுதரீதியான அச்சுறுத்தல்கள் புலிகளைத்தவிரமற்றவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் பாரம்பரியமாக ஜனநாயக வழியில் நடப்பதாக கூறிக்கொள்பவர்கள் வடமேல் மாகாணசபையில் தேர்தலை எதிர்நோக்கிய விதம் மிக மிக அசிங்கமானது. தேர்தலுக்கு முன்னர் 700ம் தேர்தலன்று ஏறத்தாழ 100 மாக கிட்டத்தட்ட 800 சம்பவங்கள். இதில் அரைவாசியாவது பாரதூரமான வன்முறைச்சம்பவங்கள். இத்துடன் ஒப்பிடும் பொழுது யாழ்ப்பாணத்தில் போட்டியிட்ட தமிழ்க்கட்சிகளுக்கு பலமடங்கு அரசியல் முதிர்ச்சி உண்டு என்பதை அவர்கள் நிருபித்துள்ளார்கள். பின்குறிப்பு;- ஜே.ஆர். போட்ட வீதியை, பிரேமதாசா செம்மைப்படுத்தி விரிவு படுத்த, சந்திரிகா அதில் மிகவேகமாப் போகின்றாராம் என சிங்கள மக்கள் பேசிக் கொள்கின்றார்கள்.

**புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சிலர் தெய்வமாக மதிக்கின்றனர். இது பற்றிச் சொலமன் என்ன சொல்லக் கூடும்?**

*ந. கண்ணன் வெள்ளவத்தை கொழும்பு.*

அண்மையில் அரங்க நாடகக் குழுவினரைச் சார்ந்த திரு. சிதம்பரநாதன் பிரபாகரனை மக்கள் தெய்வமாக மதிப்பதாக குறிப்பிட்டதை நானும் பத்திரிகை களில் படித்தேன். தெய்வம் படைத்தல், காத்தல் என்பவற்றை மட்டுமல்ல அழித்தலையும் செய்வதாக தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் கருதுகின்றனர். அழித்தல் மட்டும் செய்வதால் பிரபாகரன் தெய்வமாக உள்ளாரோ தெரியவில்லை. பிரபாகரன் தெய்வமாக இருக்கலாமெனின் ஹிட்லர், பொல்பொட், பிரேமதாசா போன்றவர்களும் வணக்கத்திற்குரியவர்களாகலாம்.

**புலிகள் எவரையும் வலுக்கட்டாயமாக இயக்கத்தில் சேர்ப்பதில்லை. எனினும் தமது பிள்ளைகள் புலிகளுடன் இணைவது குறித்துப் பெற்றோர் கவலை கொள்கின்றனர். என கூறப்பட்டிருக்கும் கருத்தை விளக்குவீர்களா?**

*சி. துரைரத்தினம் மதிரவட்டுவான் ஆயித்தியமலை.*

முதலாவது புலிகள் வலுக்கட்டாயமாக இளைஞர், யுவதிகளை இயக்கத்தில் சேர்ப்பதில்லை என்பது தவறு. மட்டக்களப்பிலும், வன்னியிலும், எத்தனை ஆயிரம் பேர் கிளிநொச்சித் தாக்குதலுக்குப் பின் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டார்கள் என்பதை மக்கள் அறிவர். அதே சமயம் புலிகள் இயக்கத்தில் தமது பிள்ளைகள் இணைவதால் பெற்றோர் கவலை அடைவதென்பது இயல்பானதே. எந்தவித நோக்கமுமற்ற, அநாவசியமான யுத்தத்தில் தமது பிள்ளைகள் ஈடுபட்டு இறப்பதை பெற்றோர், எப்படி விரும்புவர். இதிலிருந்தே இப்படியான யுத்தத்தை மக்கள் விரும்பவில்லை, நிராகரிக்கின்றார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லையா?




**அந்தரங்க சுத்தியிருந்தால்.**

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியே இனப்பிரச்சினைக்கு தீர்காணப் பட வேண்டும் என்று கூறுபவர்கள் ஏதோ ஒரு விதத்தில் ஆயுதப் போர் நடத்தப் படுவதை அங்கீகரிக்கின்றனர் என்றே கூற வேண்டும். இந்த எண்ணம் அந்தரங்க சுத்தியான தாக இருந்தால் பிரபாகரனின் தலைமைத்து வத்தை ஏற்றுக்கொண்டு அரசியலில் இருந்து விலகிக் கொள்ளலாமே? அல்லது முன்னணிக் காவலரண்களுக்குப் போய் தமிழீழ விடுதலைப் போரில் நேரடிப் பங்கை வகிக்கலாமே. என்கிறார் யாழ் மாநகர முன்னாள் பிரதி முதல்வர்.

**ஏங்கும் இதயங்கள்...**

வைத்தியசாலையில் சிகிச்சைக்களத்தில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளை சென்று பார்த்து ஆறுதல் சொல்லும் வழக்கம் எம்மவர்கள் மத்தியில் சகஜம். இதனை உணர்ந்து கொண்டதனாலோ, என்னவோ, தென்னாபிரிக்கா, பிரிட்டன், ஜேர்மன், நோர்வே எனப் பல நாடுகளிலும் இருந்து தூதுக்குழுவினர் வருகை தந்து தமிழ் மக்களைப் பார்த்து குறைகளைக் கேட்டு வருகின்றனர். தனிநாடு சாத்தியமில்லை; ஐக்கியம் தேவை; என்றவாறாக இத்தகையவர்கள் உரைக்கும் பொன்னான அறிவுரைகளைப் புறந்தள்ளிவிட்டு கடந்த காலக் கதையளப்பவர்களும், நிகழ்கால அவலங்களை எடுத்துரைப்பவங்களும் அனுதாபம் கிடைக்கும் வகையில் ஆறுதல் சொல்கிறார்களில்லையே என ஏங்குகின்றமைதான் வேடிக்கையாகவுள்ளது.

**கவலைப்பட மட்டுமல்ல களிப்புறவும்...**

கொழும்பில் தமிழ் மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்படுகின்றனர். அநாவசியமான கைதுகள், தடுத்து வைப்புக்கள் எனத் தொல்லைப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறாகப் பலமான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுவதுண்டு. எனினும் இங்கு எந்தப் பிரச்சினைகளுமில்லாமல் இசை வேள்விகளும், கம்பன் விழாக்களும் தடல் புடலாக கோலாகலமாக ஆடம்பரமாக நடத்தப்பட முடிகிறது. பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்களும் அவற்றில் கலந்து கொண்டு களிப்புவகை பெற இயலுமானதாக உள்ளது. ஆனால் இத்தகைய சூழல் வடக்கிற்கும் கிழக்கிற்கும் கிடைப்பதாக இல்லை என்பது பற்றி யாரும் கவலைப்படுவதாக இல்லை.

**வாழ்க ஜனநாயகம்**

வடமேல் மாகாணத் தேர்தலில் இடம்பெற்ற வன்முறைகள் பரவலாக பலரதும் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. குடாநாட்டில் உள்ளூராட்சி அமைப்புக்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்ட போது ஏன் இந்தத் தேர்தல்கள்? மக்கள் தேர்தலைக் கேட்டார்களா? என்றெல்லாம் கதையளந்தவர்களும் கூட வடமேல் மாகாண மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக வக்காலத்து வாங்குகின்றனர். வாழ்க ஜனநாயகம்!


**சொல்லாத இன்னுமொரு செய்தி**

அண்மையில் அமரரான சசி கிருஷ்ணமூர்த்திக்காக யாழ்ப்பாணத்தில் ஒரு இரங்கல் கூட்டம் நடந்தது. இரங்கலுரை ஆற்றிய பலரும் சசி மென்மையானவர்-மேன்மையானவர். பண்பானவர்-அதிர்ந்து பேசக்கூடத் தெரியாதவர் என்றெல்லாம் சிலாகித்தனர். அவை உண்மைதான். ஆனால் சசி. கிருஷ்ணமூர்த்தி திடீரென மாரடைப்பு வந்ததாலோ அல்லது உடற்சுகவீனம் காரணமாகவோ இயற்கை எய்தவில்லை. சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயார் விமானத்தில் பயணித்த அப்பாவிப் பயணி. இந்தச் சம்பவம் பற்றி எவரும் மூச்சும் காட்டவில்லை. ஏனைய பயணிகளைப் பற்றிக் கவலைப்படவுமில்லை. லயன் எயார் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமை பற்றி சொல்லாத இன்னுமொரு செய்தி என்றொரு நூல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

# நிட்சயமாக இதிலிருந்து மீட்சி தேவை.

**- அருட்திரு நவரட்ணம் அடிகள்.**

தமிழன் இன்று இருக்கின்ற விபரீத நிலைக்கு இன்னுமொரு சான்றாக சாட்சியாக தம்பி சதீஸினுடைய உடலுக்கு முன்னால் நாங்கள் கவலையோடும், கண்ணீரோடும் இன்று கூடியிருக்கிறோம். கட்சி சார்புகளுக்கு அப்பால் இயக்க சார்புகளுக்கு அப்பால் எல்லாவற்றிற்கும் அப்பால் மனித நேயத்தோடு என்னுடைய அஞ்சலியை செலுத்தி நிற்கின்றேன்.



வெளியிலிருந்து எங்களுக்கு வருகின்ற ஆபத்தை விட எமக்குள்ளேயிருந்தே எமக்கு ஆபத்தைவிளைவிப்பது பலத்த ஆபத்தை எங்களுக்கு ஏற்படுத்தும். தமிழ் மக்கள் அவர்களுடைய நீண்ட வரலாறு கண்ணீர் தோய்ந்த அவர்களுடைய போராட்டம் எல்லாமே எமக்கு அப்பாற்பட்ட ஒருவருக்கெதிராக எழும்பி அது இன்று திரும்பி எம்மையே தாக்குகின்ற உட்புறத்தீமையையே நான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

நிட்சயமாக நாங்கள் இதிலிருந்து மனம் திரும்பாதுவிட்டால் நாம் ஒவ்வொருவரும் தமிழினம் முழுவதும் இவ் வாறான ஒரு அவல நிலையை சந்திக்க வேண்டி ஏற்படும். இந்த நிலையிலிருந்து மீளவே என்னைப் பொறுத்தமட்டிலே அனுதினம் நான் பிரார்த்திக்கிறேன்.

ஒரு தனி மனிதனுக்கு, அவனுடைய மொழி, மண், சமுதாயம் மனித சமுதாயம் என்கின்ற பரந்த இந்த உலகத்திலேயாருக்கும் எதையும் சொல்லுவதற்கான உரிமையை இறைவன் கொடுத்திருக்கின்றான். தான் விரும்புவதையும், தான் நம்புவதையும், பேசுவதற்கும், செய்வதற்கும் உரிமை இல்லை என்று மறுப்பதற்கு இன்னுமொரு மனிதனுக்கு உரிமை இல்லை. இதையும் ஒவ்வொருவரும் நிச்சயமாக உணர்ந்தாக வேண்டும்.

இதை நாம் உணராவிட்டால் நாம் இதிலிருந்து மனம் மாறாவிட்டால் இன்னும் இது போன்ற பல இழப்புக்களை நாம் சந்திக்க நேரிடும். ஒவ்வொருவராக இறுதியாக அது நாமாக இருக்கும். நானாக இருக்கும். இந்த அகந்தைக்கு பலியாகுவதாக. ஒரு முழுமையான இலட்சியத்தோடு ஒரு நீண்ட தூரசிந்தனையோடு தமிழ் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

நாம் போகின்ற பாதை எது? இந்தப் பாதையின் இறுதி நோக்கம் என்ன? அதனுடைய இலட்சியம் என்ன? என்பவற்றை நாம் தெளிவாக்கி கொள்ள வேண்டும். எங்களுடைய உள்ளங்களிலே ஏதோ ஒரு வகையில் இந்த சகோதரன் இந்த சமுதாயத்திற்காக உழைத்தவன் என்பதில் எந்தவிதகருத்து வேற்றுமையும் இல்லை. ஆயினும் இவரை இன்று இழந்து நிற்பது ஒரு ஈடு செய்யப்பட முடியாத இழப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

இவரைவிடவல்லவர்கள் தோன்றினாலும் கூட இவருடைய இடம் என்பது அவருக்கே உரித்தான தனித்துவமான ஒரு இடம். அந்த இடத்தை இழந்துதான் இங்கு நிற்கின் றோம். தனிப்பட்ட முறையிலே நான் இவரை அறிந்திருக்கிறேன். இவருடைய இனிமையான பேச்சும், இவருடைய போக்கும், உ ள்ளத்திலே மறையாது நிலைத்து நிற்கின்றது.

இவ்வாறாக தமிழ்த்தாய் பெற்றெடுத்த இனிய புதல்வர்கள் இவ்வாறு அரைவழியில் ஒரு வகையில் பறித்துச் செல்லப்படுவதையாருமே ஏற்றுக்கொள்ள முடியாது. எந்தக்காரணத்தைக் காட்டியும் நியாயப்படுத்த முடியாது. அது என்றும் எல்லோராலும் கண்டிக்கப்படுகின்ற ஒரு விடயமாகவே இருக்கிறது.

இன்று இவருடைய இழப்புக்காக தவித்து நிற்கின்ற இவர் சார்ந்த இயக்கத் தம்பிமாருக்கும், உறுப்பினர்களுக்கும் இன்னும் சிறப்பாக இவருடைய குடும்பத்தார் அனைவருக்கும் என்னுடைய அஞ்சலியையும் என்னுடைய மனத்துயரத்தையும் வெளிப்படுத்தி உங்களோடு இணைந்து முழுமையான ஒரு சுதந்திரமான நிறைவான விடுதலைக்கு இறைவன் எம்மை அழைத்துச் செல்ல வேண்டும் என்று என்னுடைய அஞ்சலியை செலுத்தி என்னுடைய வேண்டுதலையும் இங்கு குழுமியிருப்பவர்களுக்கும் எம் இனம் அனைத்திற்கும் விடுத்து அன்யோடு விடை பெறுகின்றேன்.

யாழ் மாவட்ட புளொட் உறுப்பினர் சதீஸின் இறுதிச் சடங்கு வவுனியாவில் இடம் பெற்றபோது வவுனியா புனித அந்தோனியார் தேவாலயத்தை சேர்ந்த அருட்திரு நவரட்ணம் அடிகள் ஆற்றிய உரை இது புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட சதீஸின் மறைவுக்க அஞ்சலி செலுத்தும் வகையில் இங்கு இது தரப்பட்டுள்ளது.

# தேம்ஸ் நதி.........

9ம் பக்கம் தொடர்ச்சி

முயற்சிகளை மேவி விடுதலைக் கான போராட்டமாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த அந்த நாட் களை மனம் கொண்டு பாருங்கள்.

இத்தகைய நிலமைகள் இப் போதும் நிலைக்க வில்லை என் பதை உணர்வீர்கள். பதினோரா யிரத்துக்கும் அதிகமான புலிப் போராளிகள் சாவடைந்துள்ளனர். பல்லாயிரமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மக்கள் நாளாந்த வாழ்க்கையை நகர்த்துவதே சிரமமானதாகி யுள்ளது. எனவே இன்றைய நிலை யில் நீங்கள் யாருக்காகப் போராடு கிறீர்கள்? எதற்காகதுன்பங்களை சுமக்கிறீர்கள்? என்பதை எண் ணிப்பாருங்கள். தலமையின் வரட் டுத்தனமான பிடிவாதத்தைக் காப்பாற்றுவதற்காகவா? அல்லது மக்களின் எதிர்கால நலன்களுக் காகவா? என் பதை சிந்தியுங்கள்.

ஏனெனில் தலமையின் உத்த ரவுகளை ஏற்று துரோகிகளாகக் காட்டப்படுவர்களின் உயிர்களைக் குடிப்பதற்காக காத்திருக்கும் தருணத்தில் தயவு செய்து யார் துரோகிகள் என நினைத்துப் பாருங்கள். அல்பிரட் துரையப்பா முதல் தொடங்கிய களையெடுப்பு இன்னமும் ஓயவில்லை என்றால் அதற்கென்ன காரணம்...? அர சாங்கத்திற்கு ஆதரவானவர்கள்.... இரகசியப் பொலீசார்..... பாது காப்பு படையினர்..... மாற்று இயக் கத்தவர்கள்..... மட்டு மன்றி உங் கள் பிரதித் தலைவராக இருந்த மாத்தையா எனப்படும் மகேந் திரராசா கூட துரோகி பட்டம் சூட்டப்பட்ட நிலமை எவ்வாறு வந்தது. இவர்கள் எல்லோரும் எதிரிகள் என்றால் உங்கள் நண் பர்கள் யார்?

இலங்கைத் தீவெங்கும் வாழ்ந்த 35லட்சம் தமிழ் மக்களுக்குமாக ஆரம்பித்த விடுதலைப் போராட் டத்திலிருந்து மலையக மக்கள் விலகிச் சென்று விட்டனர். முஸ்லீம் மக்களின் பங்கு நிராகரிக்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள பூர்வீகத் தமிழர்களின் சனத்தொகையில் சரிபாதி வெளிநாடுகளுக்கு பறந்து விட்டது. அல்லது துரத்தியடிக் கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில் ஆயுத களஞ் சியங்கள் நிறைந்து போயிருக்கிறது என்று ஆனந்தப்படுவதில் அர்த் தம் இருக்கிறதா? ஆயுதகளஞ்சி யங்கள் நிறைந்திருந்தாலும் கூட இவை மக்களின் பசிக்கு உணவு ஊட்டக் கூடியவையாக இல்லை என்பதனால் தானே வன்னியிலி ருந்து உணவை அனுப்பு என்று கொழும்பு நோக்கிக் கூக்குரலிட வேண்டியுள்ளது.

மேலும் உங்கள் போராட்டச் செயற்பாடுகள் மக்களுக்கு துன் பத்தையும் துயரத்தையும் மட்டுமே கொண்டு வருகின்றது என்பது இப்போதாவது உணரப்பட வேண் டும்.ஆயுதங்கள் அரசியல் இலக்கை அடையதுணை செய்யும் கருவிகளே தவிர அதிகாரத்தின் சின்னங் களல்ல.

துணிவுடன் துப்பாக்கியை தூக்கித்திரிகிறீர்கள் என்பதற்காக மக்கள் உங்கள் செயற்பாடுகளை ஆதரிப்பார்கள் என்று எதிர் பார்க்கக் கூடாது. அச்சத்தால் ஒதுங்கியிருப்பதையும், கண்டு கொள்ளாமல் விலகிச்செல்வ தையும் ஆதரவு என்று அர்த்தப் படுத்திக் கொள்ளக்கூடாது.

ஆடம்பரமாக வாழ்ந்திருந்த போது அடிப்படை அரசியலுரி மைகளை நிலை நாட்ட ஆயிரக் கணக்கில் அணிதிரண்டு வந்த இளைஞர்களால் பெருவிருட்சமென வளர்ந்த போராட்டம் இப்போது ஆட்பலப்பற்றாக்குறையினால் தேங்கிப் போயிருப்பதை உணர் வீர்கள். வெற்றிபெற முடியாத ஒரு இலக்கைக் காட்டி தலமைத்து வத்தை தக்க வைத்து க்கொள்ள முயலும் முயற்சிகளை இனங்கண்டு கொள்ளுங்கள். ஆயுதமேந்தி நிற்பது மட்டும் தான் வீரமல்ல.

அரசியல் களத்தில் சோரம் போகாமலிருப்பதும் கூட வீரம் தான் என்பதை உணருங்கள். வீரம் தேவையானதுதான். ஆனால் விவேகம் இல்லாமலிருக்கலாகாது என்பதை அறியுங்கள்.

அன்புடன் நக்கீரன்
லண்டன்.

# மக்களின் நம்பிக்......

5ம் பக்கம் தொடர்ச்சி

ஆக்கபூர்வமான தீர்வு, ஜன நாயகம் பற்றிய சுயாதீன சிந்தனை புதிய தேடல்கள் எதுவும் இல்லா ததால் தமிழ்த் தகவல்துறை பொங்கும் புதுநீர்ப்பிரவாகம் போல் இல்லாமல் தேங்கிய குட்டையாக மாறியுள்ளது. கீறல் விழுந்த றெக்கோட் போல் ஒரே விதமான எழுத்துக்களே தமிழ்ப் பத்திரிகைகள் அலங்கரிக்கின்றன.

ஒருமாதம் அல்லது ஒருவருடத் திற்கு முன்னர் எழுதிய ஆசிரிய தலையங்கம் அல்லது கட்டுரை அட்சரம்பிசகாமல்அதேவிதமாக திரும்பத் திரும்ப வருவதும் இந்தக் கருத்து வரட்சியின் விளைவே யாகும்.

உலகம் நெருங்கி வரும் காலத் தில் உலகக் கிராமம் பற்றிய எண் ணக் கருக்கள் வளர்ச்சியடைந்து வரும் நிலையில் தமிழ்பத்திரிகை யுலகம் அதற்கேற்ப தன்னைத் தகவமைத்துக்கொள்ள வேண்டும்.

பெறுமதியான மனித உயிர்கள் மேல் தொடுக்கப்படும் தாக்குதல் களைப் பாரபட்சமின்றிக்கண்டிக்க முன்வரவேண்டும்.

ஒரு கண்ணில் வெண்ணெயும் மறுகண்ணில் சுண்ணாம்பும் என்ற போக்கு சமூகத்தை நோய் வாய்ப்படுத்தி விடும் அந்த வகையில் தமிழ் தகவல் தொடர்புத் துறை யினர் தமது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து செயற்ப் படவேண்டும். அவர்களின் பலம் எத்தகையது என்பதை அவர்கள் உணர வேண்டும். பத்திரிகைத் துறை மலினப்பட்டுப் போக அவர்கள் இடமளிக்கக் கூடாது.


பத்திரிகைகள் என்ன செய்ய வேண்டும் என்று நாம் கூற முடி யாது.

ஆனால் தமிழ் அரசியல் கட் சிகள் இயக்கங்களிடையே சுயாதீன மான ஐக்கியத்தை உருவாக்கு வதிலும்

சகல தரப்புக்களிலிருந்தும் ஜனநாயகத்தை மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதிலும்

தமிழ் மக்களின் சுயமரியாதை கௌரவத்தை உறுதி செய்யும் காரியசாத்தியமான தீர்வை உரு வாக்குவதிலும் தமிழ்ப்பத்திரி கைகள் பங்காற்றலை வழங்க முடியும்.

# குறுக்கெழுத்துப் போட்டி-42



### இடமிருந்து வலம்

1. வடேமல் மாகாண முதலமைச்சர்.
4. கணவன், மனைவி, பிள்ளைகள் என மனிதர் கூடி வாழும் சமூக அமைப்பு.
8. படுக்கையில் ஒருவரது பாதங்கள் இருக்கும் பகுதி.
10. குறுகலான வழி அல்லது தெரு.
11. வெள்ளைக்காரர். (குழம்பி)
12. செல்வத்துள் சிறந்தது கேள்விச் செல்வம். பிள் ளையாருக்கு இது பெரிதாக இருக்கிறது.
13. சிலைகள் அமைக்கப்படும் மேடை.
14. பாம்பு அல்லது சத்தம்.
16. நாம் நிறைய நிறைய சேர்த்துக் கொள்ள ஆசைப் படும் 'குற்றம்' இது.
18. தலை தப்பியது இவர் புண்ணியம்.
19. மழை முகிலுக்கு ஒப்பிடும் இதில் வாசனையும் இருக்கிறதா என்ற சந்தேகம் செண்பகப் பாண்டி யனுக்கு வந்தது. (தலைகீழ்)
20. குதிரை. (தலைகீழ்)
21. மூக்கு உள்ளவரை இதுவும் இருக்கும். (தலைகீழ்)
22. ஒருவரைக் கண்டவுடன் நலன் விசாரித்தல்.
23. தீர்வும் மூட்டையில்தான் உள்ளதா?
24. நாதஸ்வரம்.
26. மன்மதன் துணைவி திரும்பியிருக்கிறார்.
27. இதைச் செய்தவர்க்குச் சம்பளம் மரணம் என் கிறது திருமறை.
28. மந்திரத்தால் செய்வதாகச் சொல்லப்படும் தந்திர வித்தை இது.
30. கணவனை இழந்தவள் கடைசி எழுத்தில்லாம லும் நிற்கிறாள்.
31. கடித்தால் இனிக்கும் இது காமனின் கையில் வில்லாக இருக்கிறது.

### மேலிருந்து கீழ்

1. பயிர்களின் இளமைப் பருவம் இங்கே வளரும்.
2. பாத்திரங்கள் செய்யும் களிமண். (தலைகீழ்)
3. பனைகள் நிறைந்திருக்கும் பகுதி. (குழம்பி)
4. தென்னங் கீற்றில் பின்னுவது. (தலைகீழ்)
5. நிறைந்த வெளிச்சம். (தலைகீழ்)
6. ராகம் ஒன்றின் பெயர்.
7. தும்மலில் முதல் பாதி. (தலைகீழ்)
9. இந்தச் சண்டையில் வல்லவன் இந்திரஜித்.
14. ஏழை சொல் இங்கே ஏறுமா?
15. மெல்லிய ஒளி அல்லது துணியை இப்படிக் குறிக் கலாம். தோட்டாவுக்குள்ளும் இருப்பது. (குழம்பி)
17. இம்மாதத்தில் இலங்கைக்குக் கிடைத்தது இது.
18. கோயிலில் இறைவனைக் காணுதல்.
22. தஞ்சாவூரு மண்ணெடுத்து தாமிரபரணித் தண் ணியை விட்டுப் பொம்மையம் செய்யலாம். இவன் சட்டி பானைகள் செய்பவன்.
23. தமிழ் பிறந்தது இந்த மலையில் என்பர்.
24. சென்னையில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்க் கட்சித் தலைவரொருவர்.
25. அகம் உள்ளே இது வெளியே.
28. மாதா, பிதா, இவருக்குப் பின் தெய்வம்.
29. உப்பில்லாப் பண்டம் போல இது இல்லாவிட் டாலும் உணவு சுவைக்காது. (தலைகீழ்)

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

### குறுக்கெழுத்துப் போட்டி-41 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. இங்கிலாந்து | 1. இந்தியா |
| 5. பாவி | 2. கிறக்கம் |
| 7. தையல்காரன் | 3. (க)ந்தை |
| 9. திருக்கை | 4. துயர் |
| 12. கதிரை | 5. விகாரை |
| 13. யாசகம் | 6. பாரதி |
| 15. அம்மைத்தழும்பு | 8. பாகன் |
| 19. வினை | 10. அருச்சனை |
| 20. இரத்தம் | 11. கைம்மை |
| 22. பச்சையம் | 14. கொழும்பு |
| 26. புத்தாடை | 17. தர(வு) |
| 27. கையாடல் | 18. புத்தாண்டு |
| 29. புண் | 19. விபரீதம் |
| 30. தலை | 21. இடை 23. சைகை |
| 32. திருடன் | 24. யயாதி |
| 28. சுளகு | 25. ஆருடம் |
| 34. மாடு 36. பாவம் | 28. திடல் 31. வலை |
| 37. ஆதிவாசி | 33. வான் 35. மாரி |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**ஏ. கோயலின் செல்வமணி**
**2ம் வட்டாரம்,**
**வங்காலை, மன்னார்.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. க. சிவாகரன்
   இல;32, 2ம் குறுக்குத்தெரு,வவுனியா.
2. ர. அஸ்மி நிஸ்மி
   புளிச்சாக்குளம், பதுளு ஓயா.
3. மா. செல்லத்துரை
   474, மின்சாரநிலைய வீதி, திருமலை.
4. சி. ஜாழினி
   404,ஹொறவப்பொத்தானைவீதி,வவுனியா.
5. பா. சண்முகராசா
   44ஏ டக்சனராமவீதி, கல்கிசை.

# எல்லை கடந்த மரணங்கள்

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்குள் வழமையான போக்குவரத்து பாதை தவிர்ந்த வேறு மார்க்கங்களில் பயணிப்போர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமாகும் சம்பவங்கள் மன்னார் பகுதியில் அடிக்கடி இடம் பெறும் அவலம். இந்த வகையில் கடந்த ஆண்டில் மட்டும் இடம்பெற்ற உயிரிழப்புக்களை ஒரு வகை மாதிரிக்காக கீழே தருகிறோம். இவை தவிர இருபத்திமூன்று சடலங்கள் இனங்காணப்படாமல் மன்னார் செஞ்சிலுவைச் சங்கத்தாலும், மன்னார் பிரதேச கிராம சேவகராலும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

| இல; | பெயர் | வயது | திகதி |
|---|---|---|---|
| 01. | ரீ. மகேந்திரன் | 29 | 01.01.1998 |
| 02. | வி. குமாரவேலு | 59 | 06.01.1998 |
| 03. | இ. தங்கவேலு | 19 | 19.02.1998 |
| 04. | ம. சகாயநாதன் | 29 | 19.02.1998 |
| 05. | சி. முருகன் | 32 | 19.02.1998 |
| 06. | சி. உதயகுமார் | 21 | 19.02.1998 |
| 07. | எ. அன்ரன் றெக்ஸ் | 23 | 02.05.1998 |
| 08. | ஆர். இருளாண்டி | 80 | 10.07.1998 |
| 09. | எம். சங்கீதன் | 29 | 29.07.1998 |
| 10. | வை. பாஸ்கரன் | 35 | 05.08.1998 |
| 11. | வி. மகாராஜா | 21 | 05.08.1998 |
| 12. | எம். சத்தியசீலன் | 25 | 05.08.1998 |
| 13. | கு. நித்தியானந்தசிவம் | 36 | 05.08.1998 |
| 14. | க. குலசிங்கம் | 38 | 06.08.1998 |
| 15. | க. தமிழ்நாதன் | 30 | 06.10.1998 |
| 16. | பிரான்சிஸ் சூயநாதன் | 37 | 09.10.1998 |
| 17. | அன்ரன் றோச் | 39 | 18.10.1998 |
| 18. | எம். பூபாலநாதன் | 38 | 03.11.1998 |
| 19. | ஐயாகு ராசு | | 05.11.1998 |
| 20. | சின்னமணி | | 05.11.1998 |
| 21. | திருமலை ராசு | | 05.11.1998 |
| 22. | இ. ராஜ்குமார் | 22 | 18.11.1998 |
| 23. | பா. மாடாசாமி (ரவி) | 25 | 25.11.1998 |
| 24. | வெ. அருளப்பு குலாஸ் | 29 | 25.11.1998 |
| 25. | ஜோன் | | 14.12.1998 |
| 26. | பாபு | | 14.12.1998 |
| 27. | இராஜேந்திரன் | 37 | 15.12.1998 |

# குடாநாட்டு போக்குவரத்து; புலிகளின் உத்தரவு மக்கள் புறக்கணிப்பு

சாணக்கியன்

பயணிகளுக்கான விமானத்தில் படையினர் பயணம் செய்வது விரும்பத்தக்கதல்ல என்ற நிலையிலிருந்து மாறி இப்போது படையினரின் விமானத்தில் பயணிகள் போக்குவரத்து செய்ய வேண்டிய நிலை வாய்த்துள்ளது. இவ்வாறு கூறுகின்றார் அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த கிறிஸ்தோபர் என்னும் முதியவர். தள்ளாத வயதில் அலுமினிய வாங்குகளில் அமர்ந்து ஆசனப் பட்டிகள் கூட எதுவுமில்லாமல் தொங்கும் கயிற்றைப் பிடித்தபடியான இந்தப் பயணம் என் நினைவில் என்றும் அகலாது.

சுய விருப்பத்தின் பேரில் இந்தப் பயணத்தை மேற்கொள்கிறேன் என்றும், எந்த ஆபத்தையும் எதிர் கொள்ளத் தயாரென்றும் எழுதப்பட்ட கடிதத்தில் கையொப்ப·மிட்ட பின்னரேயே பயணம் மேற்கொள்ள முடிந்தது எனவும் இன்னுமொருவர் தெரிவிக்கின்றார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான பயணம் எவ்வளவுக்கு சிக்கல்கள் நிறைந்ததாக மாறியுள்ளது என்பதற்கு இக் கூற்றுக்கள் சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே.

யாழ்ப்பாணத்திற்கான தரை வழிப்பாதையைத் திறக்க விடாமல் தடுத்து வைத்துள்ளோம் என வீரம் காட்டுபவர்கள் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டு கொள்வதாக இல்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு இராணுவத்தினரின் முகாம் எனக் கருதிக்கொண்டு படையினரின் விநியோகத்தைத் தடுக்கின்றோம் என்ற போர்வையில் மக்களின் நாளாந்தச் செயற்பாடுகள் இன்னல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது.

கடல் வழியாயினும் சரி, வான் வழியாயினும் சரி மக்களுக்கான போக்குவரத்து நடைபெறுமாயின் படைத்தரப்பு தனது இராணுவ விநியோகம், நகர்வின் சாதகம் என்பன கருதியே செயற்படும். நாம் இதனை அனுமதிக்க மாட்டோம்.

மக்களுக்கான போக்குவரத்தாயினும் சரி, அத்தியாவசிய சேவைகள் போக்குவரத்தாயினும் சரி மனிதாபிமான அமைப்புக்களின் கண்காணிப்புடன் நடைபெறுவதையே விரும்புகின்றோம். அனுமதிக்கிறோம்" என்றவாறாக அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட விடுதலைப்புலிகள் சார்ப்பில் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் படையினர் விமானத்தில் பாதுகாப்பு அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல் மக்கள் பயணம் மேற்கொண்டுவருகின்றனர். இந்த நிலமை குடாநாட்டு மக்கள் விடுதலைப்புலிகளின் அரசியல் வழிகாட்டலைப் புறக்கணிக்கத் தொடங்கியுள்ளனர். என்பதற்கு பொருத்தமான ஒரு எடுத்துக்காட்டு.

குடாநாட்டில், நீதிமன்றச் செயற்பாடுகளை முடமாக்கும் விடுதலைப்புலிகளின் முயற்சி முனை மழுங்கிப் போனமையும், இதனை மேலும் உறுதிப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

விடுதலைப்புலிகள் ஏந்தியிருக்கும் துப்பாக்கிகள் தான் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கான கேடயங்கள் என்ற எண்ணம் தற்போதும் பொருத்தமானது அல்ல. மாறாக மக்களின் சேமநலன்களைத்தான் தமது பாதுகாப்புக்கான கவசங்களாக விடுதலைப்புலிகள் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இந்த நிலையில்தான் குடாநாட்டுக்கான போக்குவரத்தைத் தடுத்து நிற்பது கொள்ளப்பட வேண்டும். கடல் வழியிலும், வான் வழியிலும், கொழும்புக்கு மனிதாபிமான அமைப்புக்களின் பயணிகள் சென்று வரலாமெனின் அதே அமைப்புக்களின் கண்காணிப்புடனாவது தரைவழிப்பாதை ஒன்று ஏற்படுத்தப்படுமாயின் பொது மக்கள் கூடிய பயன்பெற வாய்ப்பு உண்டாகுமே என்கிறார் யாழ்ப்பாண வாசி ஒருவர்.

மக்கள் நடைமுறையில் ஏற்றுக்கொள்ள முடியாத உத்தரவுகளைப் பிறப்பிப்பதன் மூலம் அரசியல் தலமைத்துவம் பேணப்படமுடியும், மக்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று இனியும் விடுதலைப்புலிகள் கருதுவார்களேயானால், அது மக்களால் புறக்கணிக்கப்படும் நிலைதான் ஏற்படும் என்பதற்கு குடாநாட்டுக்கான போக்குவரத்து ஏற்பாட்டில் மக்கள் காட்டும் பங்களிப்பு ஒரு சிறந்த உதாரணம் மட்டுமே. ●

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

## ஈ.பி.ஆர்.எல்.எவ் கண்டனம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சிச்சபை தேர்தலில் போட்டியிட்டு தெரிவான வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உபதலைவர் நடராஜா சிவராஜா வயது 62 கட்டப்பிராய் விளையாட்டுமைதான வீதியை சேர்ந்த செல்லத்துரை புவிச்சந்திரன் வயது 25 ஆகியோரது படுகொலைகள் ஜனநாயகவிரும்பிகள், மனிதாபிமான எண்ணங்கொண்டவர்களுக்கு அதிர்ச்சியையும் கவலையையும், சினத்தையும் ஏற்படுத்துவதாகும்.

மாத்தையா குழு என்றும், தமிழின விடுதலை விரும்பிகள் என்றும் படுகொலைகள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்படுவது எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தும். வன்முறையும் எதிர் வன்முறையும் எமது சமூகத்திற்கு நாசத்தையே விளைவிக்கும்.

பாரிய போக்குவரத்து நெருக்கடிகள் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்கள், நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டநிலை போன்ற பிரச்சினைகளுக்கு யாழ்குடாநாட்டு மக்கள் முகங்கொடுக்கிறார்கள். மக்களுக்கு இந்த நெருக்கடிகளை ஏற்படுத்துவதில் தமிழ் மக்களின் சுபிட்சமான வாழ்வுக்காக போராடுவதாக கூறிக்கொள்பவர்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே கொடூர யுத்தத்தால் பாழகிப்போன யாழ்ப்பாணம் செப்பனிடப்படுவதை திருத்தியமைக்கப்படுவதை இவர்கள் விரும்பவில்லை. துன்பங்களுடனான மக்களின் வாழ்வு தமக்கு சாதகமாக இருக்கும் என்று அவர்கள் கருதுகின்றார்கள்.

சமூக சேவகர்கள், புத்திஜீவிகள், மக்களுடன் வாழும் அரசியல் வாதிகள், மாற்றுக்கருத்துக்கொண்டோர், மாத்திரமல்ல அப்பாவி சனங்களையும் படுகொலை செய்வதன் மூலம், பயமுறுத்துவதன் மூலம் தமது மேலாதிக்கத்தை தமிழ்சமூகத்தின் மீது நிறுவமுடியும் என நம்பியே இந்தப் படுகொலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.


இந்தப் பாசிச எண்ணத்தை விடுதலைப்போராட்டத்தின் ஒரு பகுதியாக சிந்திக்கும் குரூரமனம் கொண்டவர்களும் இந்தப்படுகொலைகள் தொடர்வதற்கு ஒரு காரணம்.

கடந்த 20வருடங்களுக்கு மேலாக பல்லாயிரக்கணக்கானோர் துரோகிகள் என்ற பேரில் அழிக்கப்பட்டுள்ளனர். இது பேரினவாத சக்திகள் மேற்கொண்ட அழிவுகளுக்கு புறம்பான தமிழ் மக்களின் விடிவிற்காக போராடுவதாக சொல்லிக்கொள்பவர்களாலேயே நிகழ்த்தப்பட்டவையாகும்.

இந்தப் படுகொலைவாதப் போக்கிற்கெதிராக செயற்பட அனைத்து ஜனநாயக சக்திகளும், மனித உரிமைகளை நேசிப்பவர்களும் ஒன்றிணையுமாறு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கூறுகின்றோம்.

இந்தப்படுகொலைகளுக்கெதிரான எமது கண்டனத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துக் கொள்வதோடு, உயிரழந்தவர்களின் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## மோதல்கள் இனியும் வேண்டாம்



அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே, சக இயக்கத் தோழர்களே, மாணவர்களே, நண்பர்களே!

அண்மைக் காலங்களில் இயக்கங்களுக்கிடையில் ஏற்பட்டுவரும் தகராறுகளும், துப்பாக்கிச் சூடுகளும், மக்கள் மத்தியில் விரக்தியையும் வேதனையுமே உருவாக்கி வருகின்றது. பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு, இயக்க மோதல்கள் நம்பிக்கையீனத்தையும், விசனத்தையுமே ஏற்படுத்தும்.

நாம் எல்லோரும் ஐக்கியப்பட்டு, எமது உரிமைகளுக்காகப் போராட வேண்டுமென ஒட்டுமொத்தமான தமிழ் மக்களும் கோரும்போது, அநாவசிய இயக்க மோதல்கள் குறைந்தபட்ச நம்பிக்கைகளையும் சீரழித்துவிடும்.

யுத்தத்தின் கெடுபிடியால் ஏற்பட்டுள்ள "பாஸ் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, அகதிகள் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினையென ஆயிரம் பிரச்சினைகளுக்குள் மக்கள் சிக்கித் தவிக்கும் பொழுது, மக்களை மேலும் மேலும் அவலத்துக்குள்ளாக்கும் வகையில் இயக்கங்களின் செயற்பாடுகள் அமைவது வெறுக்கத்தக்கது.

மனித உயிர்கள் விலைமதிப்பற்றவை, ஒவ்வொரு உயிரும் காவு கொள்ளப்படும் பொழுது அக்குடும்பம் எவ்வளவு தூரம் பாதிப்புக்குள்ளாகும் என்பதை இயக்கங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனிதத்துவம், மனிதாபிமானம், மனித நேயமற்றவர்களின் கைகளில் துப்பாக்கிகள் இருப்பது கொடூரமானது என்பதற்கு, எமது ஈழப்போராட்ட வரலாறே சாட்சி. எவ்வளவு கல்விமான்கள், புத்தி ஜீவிகள், அப்பாவிகள் கொலை செய்து குவிக்கப் பட்டனர். இது இன்னும் தொடர வேண்டுமா என சிந்தித்துப் பாருங்கள்.

வவுனியாவில் இயக்க மோதல்களால் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர். தமது சொந்த சுயநலன்களுக்காக மாணவர்களைப் பகடைகாயாக்குவதும், அவர்களைத் தவறான வழியில் நடாத்துவதும் ஆரோக்கியமான சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கு அடிப்படையாகாது.

தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் மாணவர்களின் பங்கு மகத்தானது. ஆனால் வவுனியாவில் இயக்க மோதல்களுக்குள் மாணவர்கள், இழுக்கப்படுவதும், இயக்க பின்பலங்களை வைத்துக் கொண்ட மாணவர்கள் பாடசாலைகளில் அடாவடித்தனமாக நடப்பதும், ஆசிரியர்களை அவமரியாதைப் படுத்துவதும் கண்டிக்கத் தக்கது. 5.2.99 அன்று க.பொ.த உயர்தர மாணவன் கிருஷ்தோபர் கிருஷாந்தன் சுட்டுக்கொல்லப்பட்டது, மிகவும் மோசமான ஓர் செயல் என்பதுடன், இயக்கங்களும், மாணவர்களும், இனியாவது, தமது தவறான பாதையை கைவிட்டு, நேர்வழி செல்ல இதனை ஓர் பாடமாகக் கொள்ள வேண்டும்.

சக இயக்கத் தோழர்களே, மாணவர்களே! இக்கொலைக்கலாசரத்துக்கு இனியாவது முடிவு கட்டுங்கள். எந்த ஓர் பிரச்சினையையும் பேசித் தீர்ப்பதற்கு முன்னுரிமை அழியுங்கள். யார் கொலை செய்யப்பட்டாலும், அது அநியாயம் என்பது மாத்திரமல்ல, இதனால் ஒரு குடும்பத்தையே நாம் நடுத்தெருவுக்கு கொண்டு வருகின்றோம் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.


எனவே மக்களின் கருத்துக்களை செவிமடுத்து அடிதடி அரசியலைகைவிட்டு, எமது மக்களின் விமோசனத்திற்காக நாம் ஒன்றுபடுவோம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு

ஈ.பி.ஆர்.எல்.எவ்

வவுனியாவில் இருந்து துண்டுப்பிரசுரம்

## கண்ணீர் அஞ்சலி



தோழர் திரு தனபாலரட்ணம் அவர்கள் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையுமாவார். மிக நீண்ட காலம் வவுனியாவில் வாழ்ந்தவர்.

1987 இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் உடன் இணைந்து கொண்டவர். அப்போதிருந்து தொடர்ச்சியாக தனது சமூகப் பணியை மேற்கொண்டுவந்தவர். தனது இளமைக்காலத்தில் திருநெல்வேலிப் பகுதியில் சனசமூக நிலையங்கள், நூல் நிலைய நிர்வாகங்களில் இருந்து அரும்பணியாற்றியவர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்ததன் பின்னர் வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் அவர் செயற்பட்டுவந்துள்ளார்.

வவுனியா நகர சந்தை பகுதிகளில், திருநெல்வேலி, நல்லூர் பகுதிகளிலும், மன்னாரிலும் நன்கு அறிமுகமானவர் அவர். தனது ஒய்வாக இருக்க வேண்டிய வயதிலும் உற்சாகமாக வேலை செய்தவர் அவர். ஒரு இளைஞனுக்குரிய உற்சாகம் அவரிடம் இருந்தது. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவர் முடங்கிக் கிடக்கவில்லை.

கட்சியின் பொதுவான விசேடமான வேலைகளில் அவருக்கென ஒதுக்கப்படும் வேலைகளை எந்த விதமான மனச்சுழிப்பு மின்றி மேற்கொண்டவர். ஓரளவு எழுதும் ஆற்றலும் அவருக்கிருந்தது.

யாழ்குடாநாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நல்லூர் பிரதேச சபைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் முதன்மை வேட்பாளராக அவர் போட்டியிட்டார். கணிசமான வாக்குகள் பெற்று உறுப்பினரானார். பிரதேச சபையின் இரண்டாம், மூன்றாம் கூட்டங்களிலும் பங்குபற்றினார். அந்த இரண்டாம், மூன்றாம் கூட்டங்களிலும் மக்களின் பிரச்சினைகளைச் சபையில் தெரிவிப்பதில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்.

வவுனியாவில் கட்சி மேற்கொண்ட சிரமதானப்பணிகள், நூல் நிலையத் திறப்பு விழாக்கள், தியாகிகள் தினம், விளையாட்டு நிகழ்ச்சிகள், சமாதானத்திற் கான நடவடிக்கைகள் ஆகியவற்றில் அவர் பங்களித்திருந்தார்.

அர்ப்பணத்துடன் வேலை செய்த அவர் தனது உடல்நிலை மோசமாகிச் செல்வதை அசட்டை செய்தார். அதுவே அவரின் மரணிப்பிற்கும் காரணமாயமைந்தது.

அன்னாரின் மறைவுக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது. ●

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.